
www.tamilarangam.net

# சக்தி

கலை, இலக்கிய, சமூகவிஞ்ஞானக் காலாண்டிதழ்




பெண்

ஒரு பத்திரிகைக் குறிப்பு




வார்டோவில் வாழும் தமிழர்கள்



87 RUE DE COLOMBE
SEINE , FRANCE

யாழ்ப்பாணத்துப் பெண்கள்



மூட்டாள்கள் மூட்டிய போர்நெருப்பு



திரைப்படங்களில் தமிழ்ப் பெண்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பங்களா தேசத்தின் இரு பெண்கள்



பேகம் காலிடா ஸியா



சேய்க் கசீனா வாஜெட்

இஸ்லாமிய நாடொன்றின் தலைவராக பெண் ஒருவர் தேர்வாகியிருப்பது இது இரண்டாவது முறை. முதன்முறையாக பாகிஸ்தானில் பெனாஸிர் பூட்டோ தெரிவானபோது அங்கு எதிர்க்கட்சியின் தலைமையில் இருந்தவர்கள் ஆண் ஆரசியல்வாதிகளே. ஆனால் இம்முறை பங்களாதேசத்தில் இடம்பெற்ற தேர்தலின் பின்னர் ஆளுங்கட்சித் தலைவராகவும், எதிர்க் கட்சித் தலைவராகவும் பெண்களே இடம் பெறுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

பெனாஸிர் பூட்டோவுக்கும் இவ்விருபெண்களுக்கும் நிறைந்த ஒற்றுமைகள் உண்டு. எதிர்க்கட்சித் தலைவியாகவிருக்கும் சேய்க் கசீனா இராணுவத்தினரால் கொல்லப்பட்ட பங்களாதேசத்தின் முதல் ஜனாதிபதியான முஜிபுர் ரகுமானினின் மகளாவார். தெரிவாயிருக்கும் பேகம் ஸியா இராணுவத்தினால் கொல்லப்பட்ட இன்னொரு (இராணுவ) ஜனாதிபதியான ஸியாவுர் ரகுமானின் மனைவியாவார். பெனாஸிர் பூட்டோவைப் போலவே இவ்விரு பெண்களும் தங்களின் அரசியல் கொள்கைகளினை நம்பியிராது இறந்துபோனவர்களின் செல்வாக்கினை நம்பியே அரசியலில் குதித்தவர்கள். திறந்த பொருளாதாரக் கொள்கையினை ஆதரிக்கும் சேய்க் கசீனாவைவிட கலப்புப் பொருளாதாரத்தை ஆதரிக்கும் பேகம் ஸியா தேர்தலில் வெற்றிபெறுவார் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்டமாதிரியே தேர்தல் முடிவுகளும் அமைந்துள்ளன. ஆனால் இத்தேர்தலில் நிறையவே ஊழல்கள் நடந்திருப்பதாகவும் சொல்லப் படுகிறது. இராணுவத்தின் ஆளுமை இன்னமும் பங்களாதேசத்தின் அரசியலில் மடிந்துவிடவில்லை. இராணுவத்தினை திருப்திப்படுத்தியவாறு இவரால் ஆட்சி நடத்துவது சாத்தியமா என்பது ஒரு கேள்விக் குறியே.■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**பெண்கள் கல்வி நிலைய வெளியீடு**
37 Kinross Avenue, Colombo 4, SRILANKA

## வார்ப்புக்கள்

**பாரதி**

ஒரு பெண்ணின் அக, புற வாழ்வு, தொடர்பான பல்வேறு பரிமாணங்களை புரிந்துணர்வுடன் வித்தியாசமான கோணத்தில் ஆராய்ந்திருக்கிறார் ஆசிரியர். கட்டுரைகளை வெறும் கோட்பாடு ரீதியாக அல்லாமல் சிறுகதை வடிவில், சம்பாஷனை வடிவில் அமைந்திருப்பது வாசகரை ஈடுபாட்டுடன் வாசிக்க செய்கிறது. பெரும்பான்மையான பெண்களின் குறுகிய மனப்பான்மைக்கு காரணம், பெண் குழந்தையின் பிறப்பு, வளர்ப்பு தொடர்பாக நாம் காட்டும் பாரபட்சம்- பெண் குழந்தையைக் கருவில் கொல்லுதல், பிறந்ததாகச் சலித்துக் கொள்ளுதல், அலங்காரப் பதுமைகளாக வளர்த்தல், மன அறிவு வளர்ச்சியை ஊக்குவிக்காதது மட்டுமின்றி அது குறைவுபடக்கூடிய சூழலில் வளர்த்தல், ஆண் குழந்தைகளைச் சீராட்டி, முன்னுரிமை கொடுத்து, மன அறிவு வளர்ச்சியில் மிகுந்த அக்கறை செலுத்தல், பெண் குழந்தைகளின் உடற்கூறு தொடர்பாக விளக்கமளிக்காமல் (உ+மாக அவர்கள் பெரியவர்களாகும் போது), அவர்களை மோசமாக நடத்துவதன் மூலம் அவர்களது மனநிலையைப் பாதித்தல், கூட்டுக் குடும்பத்தில் பெண்கள் அனுபவிக்கும் கொடுமைகள் போன்ற பல விடயங்களை நாளாந்த வாழ்வில் நாம் சந்திக்கும் அனுபவங்களிலிருந்து எடுத்துத் தருகிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மக்கள் தொடர்பு சாதனமும் மகளிரும்

**சந்திரிகா சோமசுந்தரம்**

சமுதாயத்தில் பெண்ணுக்கு வழங்கப்படும் இரண்டாம்தரநிலை, பெண்ணுக்கு வழங்கப்படாத உரிமைகள், வாய்ப்புக்கள், தம் திறமையை- நிலையை உணராது முடங்கிக் கிடக்கும் பெண்கள் பற்றிய குறிப்புடன் ஆரம்பிக்கும் இவர் வேதகாலம் தொடங்கி இன்றுவரை பெண்களின் நிலையிலேற்பட்ட மாற்றத்தை ஆராய்கிறார். இறுதியில் மையப்பொருளாக "மக்கள் தொடர்பியலில் மகளிர்" எனும் அத்தியாயம் வெகுசனத்தொடர்பு சாதனங்களான சினிமா, பத்திரிகைகள் எவ்வாறு பெண்களை நுகர்வோராகவும், குடும்பத்தின் மையமாயும், மனைவியாயும்,அதிக பயன் தரக்கூடிய மலிவான தொழிலாளியாயும் சித்தரிப்பதன் மூலம் அழகும் கவர்ச்சியும் கொண்ட பெண்மாதிரிகளை உருவாக்கி அவற்றையே எமது கலாச்சாரப் பண்பாக ஏற்றுக் கொள்ளும் நிலையை சமுகத்தில் தோற்றுவிக்கின்றன என்பது கூறப் படுகிறது. கதைகள் கட்டுரைகள் பழமைக் கொள்கைகளை வலியுறுத்திப் பெண்களின் வளர்ச்சியை முடக்குவதோடு அவர்களை மாறிவரும் யதார்த்திற்கேற்ப மாறவிடாமல் நெருக்கடிக்குள்ளாகின்றன.

## பெண்ணடிமையின் பரிமாணங்களும் பெண்ணுரிமையின் விளக்கமும்

**செல்வி திருச்சந்திரன்**

வேதகாலத்தில் சிறந்த கல்வியறிவு கொண்டவர்களாக, விவாதிகளாக, வேதசூத்திரங்கள் இயற்றியவர்களாக, தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்களாக பெண்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால் அந்நிலை படிப்படியாகக் குறைந்து புராண இதிகாச காலங்களில் மிகமோசமான நிலையை அடைந்தது. இந்நிலையில் சங்கம் மருவிய காலம் தவிர இன்றுவரை பெரிய மாற்றங்கள் ஏற்படவில்லை என்பதை அக்காலகட்ட இலக்கியங்களை அடிப்படையாக கொண்டு எடுத்துக் காட்டுகிறார். ஊதியமற்ற குடும்பவேலைகள், வெளிவேலையின் இரட்டைசுமை, சுதந்திர வர்த்தக வலயத்தில் வேலைக்கமர்த்தப்பட்ட பெண் தொழிலாளர் சுரண்டப்படல்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இரவுவேலை பிரச்சனைகள், இலங்கைப் பெண்களின் தொழிற்சங்க நடவடிக்கை என்பன பற்றிய ஆய்வு, தமிழ்ச் சினிமாவில்- இலங்கைச் சிறுகதையில் பெண்மை என்பன விவரிக்கப்பட்டுள்ளன. இறுதியாக பெண்விடுதலைவாதம் ஒரு மேலைத்தேயத்திற்குரிய கோட்பாடு அல்ல என்றும் வெவ்வேறு வழிகளில் கீழைத்தேய நாடுகளிலும் இடம் பெற்றிருக்கிறது என்பதையும், பெண்ணிலைவாதத்தை கொச்சைப்படுத்தும் பலவாதங்களுக்கு தர்க்கபூர்வமாக விடையளிப்பதுடன் இவ்வாறு கொச்சைப்படுத்துவதற்கான காரணங்களையும் விளக்கியிருக்கிறார். இதிலிருந்து ஒருபகுதி கீழே தரப்படுகிறது:

"பெண்விடுதலைவாதம் பேசுவோர் எல்லாம் புகைபிடிப்பார்கள். ஆண்கள் உடையில் தோன்றுவார்கள். இது நம் கலாச்சாரத்திற்கு புறம்பானது என்பது சிலரின் வாதம்."மழித்தலும் நீட்டலும் வேண்டாம் உலகம் பழித்ததை ஒழித்துவிடின்" என்று பழம் பெரும் வாக்கு கூறினாலும் ஒரு இயக்கத்தின் புறச் சின்னமாக காலத்திற்கும் கருத்திற்கும் ஏற்றவாறு உடை நடைபாவனை தோன்றுவது தவிர்க்க முடியாததொன்று. சந்நியாசி காவி உடை தரிப்பதும், ஜைன மத திகம்பரர் நிர்வாணமாக இருப்பதும், காந்தியும் காந்தி பக்தர்கள் கதர் உடுப்பதும் ஒரு எதிர்ப்புக் கருத்தையும் தீவிரவாதத்தையும் எடுத்துக் காட்டவே ஆண்கள் போன்ற உடை நடை பாவனைகள் தாமும் ஏற்று நாமும் அவர்களைப் போல அவர்களது உரிமையுடனும் சுதந்திரத்துடனும் வாழப்போகிறோம் என்பதின் ஒரு ஒலியே இந்த புறத்தோற்றம். பழையகாலப் பாட்டி ஒருத்தி பின் விறாந்தையில் சுருட்டுப் புகைத்தால் அவளைப் பண்பாட்டின் விரோதி என்று யாரும் கூறமாட்டார்கள். ஆண்கள் வேட்டியும் சால்வையும் அணியாமல் சூட்டும் கோட்டும் அணிவது பண்பாட்டிற்கு விரோதமல்ல. ஆனால் பெண்ணொருத்தி அந்நிய நாட்டு உடை அணிந்தால் அது மாத்திரம் சரியல்ல, இதனால் என் வாதம் பெண்கள் எல்லோரும் ஆண் உடையில் காட்சி தந்து புகை பிடிக்கவேண்டும் என்பதல்ல. எது எது அவர்களுக்கு விருப்பமோ அதை அணியும் சுதந்திரம் ஆணுக்கோ பெண்ணுக்கோ இருக்க வேண்டும். அதைதேர்ந்து எடுக்கும் உரிமை ஆணுக்கு இருப்பது போல பெண்ணுக்கும் இருக்கவேண்டும். பெண் ஒருத்தி சைக்கிள் ஓட்டும்போதோ உயர ஏறி வேலை பார்க்கும் சந்தர்பங்களிலோ சேலை கட்டுவது ஆபத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விளைவிக்கும். ஆனால் அதைத் தேர்ந்தெடுக்கும் உரிமை ஆணுக்கு இருப்பது போல பெண்ணுக்கும் இருக்க வேண்டும். ஆனால் தேசிய பண்பை நாம் வலியுறுத்த வேண்டின் எமது உடை எமது தனித்துவ சுதந்திரசின்னம் என்ற அடிப்படையில் எமது சுதேசிய உடையை விட்டுக் கொடுக்க கூடாது என்பது சிலரது அபிப்பிராயம். இதையும் நாம் உதறித் தள்ளக் கூடாது. இந்த ரீதியில் எம் நாட்டுப் பெண்கள் ஆண்களை விட எவ்வளவோ மேல். பெண்களில் பெரும்பாலானோர் தேசீய உடையையே அணிகிறார்கள். இந்தியாவிலும் விதவைகள் பொட்டணிதலும் நிறச்சேலைகள் அணிவதும் கூட ஒரு புரட்சி மனப்பான்மையே. பெண்ணுக்கென்றே, (ஆண் விதவை-தபுதாரர்- களுக்கு புறச் சின்னம் எதுவும் எங்கும் இல்லை). ஒதுக்கப்பட்ட இந்தப் புறச் சின்னங்களை நாம் நிராகரிக்கிறோம் என்பதை துலாம்பரப்படுத்தும் ஒரு மனப்பான்மையே இது.

பொட்டு சுமங்கலித்தன்மையின் சின்னம். அப்படி ஆண்களுக்கு சுமங்கலித்துவத்தை தோற்றுவிக்க ஒரு சின்னமும் இல்லை. ஆகவே நாம் பொட்டு வைப்பதில்லை என்று ஒரு சில சுமங்கலிகள் பொட்டில்லாமலே திரிவர். இதுவும் அவர்களது நிராகரிப்பு மனப்பான்மையே. அதேபோல் பொட்டு தமிழ்ச்சின்னம். பொட்டு வைத்த பெண்களைத் தேடி சிங்களக் காடையர் கற்பழித்தனர், வெட்டினர், எரித்தனர். அந்த சிங்கள இனவாதத்திற்குப் பயந்து நாம் எமது தேசீய சின்னங்களைத் துறக்கமாட்டோம் என்று தமிழ்ப் பெண்கள் இன்று கொழும்பில் பொட்டு வைத்துத் திரிவர். ஆகவே இந்தப்"பொட்டு" என்ற ஒரு சின்னமே எத்தனை கருத்துருவ வெளிப்பாடுகளைக் கொண்டு வந்திருக்கிறது. ஆகவே இந்தப் புறச்சின்னங்களுக்கு பின்பு உள்ள கருத்துடிவங்களையே நாம் தேடி அறியவேண்டும். இப்படிப் பட்ட கருத்து வெளிப்பாடுகளை நாம் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை. அவற்றைப் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். அதை விடுத்து பெண்விடுதலை மேலை நாட்டிற்குரியது. எமக்குத் தேவையில்லை. அது அநாகரீகப் பண்புகளை உடையது என்று வெறுத்து ஒதுக்கக் கூடாது. அந்நாட்டு மகளிர் அநுபவித்த, அநுபவிக்கும் இன்னல்களை அறிந்து அவர்களுக்கு எமது அநுதாபத்தையும், ஆதரவையும் நாம் நல்க வேண்டும். அக் கருத்துக்களை ஆராய்ந்து அவை எவ்வளவில் சரி, எது சரி என்று வாதிக்கும் பண்பை நாம் வளர்க்க வேண்டும்.■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## ஆனந்தி
# சுதந்திரக் காற்று



வீட்டிற்கு நடுவே
கிணற்றுக்கு
அத்திவாரம் போடும்
செல்கள்
கந்தக தூசிகளோடு
போராடும்
முக்குத் தூவாரங்கள்
பிணங்கள் மீது
பதிந்து செல்லும்
கால்கள்
இவைகளுக்கு நடுவேயும்
கையில்
என் முகவரியிட்ட
உன் கடிதம்

எனக்கு புரிகிறது
என்
முகத்தைப் பார்த்துத்தான்
நம் வாழ்வின்
இணைவைப் பற்றி
வார்த்தைகளை
வடித்திருப்பாயென்பது

உனக்குத் தெரியுமா?
எனக்கு
இன்னுமொரு பெயர்
"அடங்காதவள்"
சமூகம் தந்தது
என் முச்சு,
வீட்டுக் கதவுகளுக்கு
பூட்டுப் போடாததால்தான்
ஆனால்
நான் சுதந்திரமானவள்
என்
இறக்கைகளுக் கு
தடை போட முடியாது
வேலியும் தான்

எங்கள் கிராமத்து மணலில்
என் கால்கள்
புதைய மறுக்கின்றன
ஆனாலும்
நடக்கிறேன்
என் பாதையில்

நண்பரே
இவைகளை உன்னால்
ஜீரணிக்க முடியுமானால்
அந்திசாயும்போது
கடற்கரையோரம் வா
அங்குதான்
காற்று சுதந்திரமாக வீசும்.■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# "இப்படித்தான் இருக்க வேண்டும் பொம்புளே"

காயத்ரிதேவி

தமிழ் திரைப்படம், சமுதாயத்தில் அது ஏற்படுத்தும் தாக்கம் என்பன பல்வேறு பரிமாணங்களைக் கொண்டன. தமிழ்ப்படங்கள் மனிதர்களை (ஆணோ, பெண்ணோ), அவர்களிடையேயான உறவுகளை, நாளாந்த வாழ்க்கைப் பிரச்சனையை எவ்வாறு சித்தரிக்கின்றன, வர்க்க முரண்பாடுகளை எவ்வாறு மழுங்கடிக்கின்றன அல்லது கூர்மையாக்குகின்றன, இன பேதங்களை கிராம வேறுபாடுகளை, அரசியற் கருத்துப் பேதங்களை எவ்வாறு கையாளுகின்றன, இன்னோரன்ன பல தலையங்கங்களில் நாம் ஆராயலாம். எனினும் இக்கட்டுரை சுருக்கம் கருதி திரைப்படங்கள் பெண்கள் தொடர்பான கருத்தியல்களை எவ்வாறு கையாளுகின்றன என்பதனுள் தன்னை வரையறுத்துக் கொள்கிறது. இதன் அர்த்தம் ஏனையவற்றைக் குறைத்து மதிப்பிடுவதோ அல்லது திட்டமிட்டு ஒதுக்குவதோ அல்ல.

-கட்டுரை ஆசிரியர்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பண்பாட்டு உருவாக்கத்தில் வெகுசனத் தொடர்பு சாதனங்கள் கணிசமான பங்கு வகிக்கின்றன. அதிலும் திரைப்படம் தனது காட்சிப்படுத்தும் ஆற்றலினால் படிப்பறிவற்றவர்களுட்பட எல்லோர்மீதும் செல்வாக்கு செலுத்துகிறது. இத்தகைய சக்திவாய்ந்த திரைப்படம் தமிழ்ப் பண்பாட்டில் பெண்கள் தொடர்பாக எத்தகைய கருத்தியல்களை உருவாக்கியுள்ளது? அவை எந்த அளவு ஆரோக்கியமானவை, சமுதாயத்தின் அரைப்பங்கான பெண்களின், அதன் விளைவாக மொத்த சமுகத்தின் முன்னேற்றத்தில் இவை எந்தளவு பங்களிப்பைச் செய்திருக்கின்றன என்பவை தொடர்பாக சில கருத்துக்களை இக்கட்டுரை முன்வைக்கிறது. புலம் பெயர்ந்த தமிழர்களின் முக்கிய பொழுதுபோக்காகவும், அதேவேளை தாய்நாட்டுடன் தொடர்பற்ற தமிழ்ப் பிள்ளைகளுக்கு தமிழ்ப் பண்பாட்டைக் காட்டும் ஊடகமாகவும் இவை உள்ளதால் இவை பற்றிய விழிப்பு அவசியமாகும்.

## 1. பெண்களுக்கான வரைவிலக்கணம்

பெண்களின் ஆளுமை, குணாம்சம், நடையுடைபாவனை, அவர்கள் வாழ்வின் குறிக்கோள் ஆகிய பல்வேறு அம்சங்கள் திரைப்படங்களில் எவ்வாறு சித்தரிக்கப்படுகின்றன? அவைகாட்டும் 'இலட்சியப்'பெண்கள் அல்லது பெண்'மாதிரி' (model)கள் எத்தகையவர்கள்? இவை அதன் மூலம் சொல்லவிரும்பும் செய்தி என்ன என்பவற்றை ஆராய்வோம்.

தமிழ்பட ஆண்களில் கதாநாயகன் நல்லவனாயும் வில்லன் கெட்டவனாயும் சித்தரிக்கப்படுவது போல பெண்ணும் நல்ல பெண், கெட்டபெண் என இரு வகையாகச் சித்தரிக்கப்படுகிறாள். இதில் நல்லபெண்ணுக்கென சில குணங்கள் வரையறுக்கப்படுகின்றன. அவை அடக்கமான, நாற்குணமும் கொண்ட, எதிர்த்துப் பேசாத, குடும்பத்திற்காக தியாகம் செய்து ஓடாய்போன, கணவனே கண்கண்ட தெய்வமெனக் கொண்ட (அவன் கல்லோ, புல்லோ, பரஸ்திரீலோலனோ, கயவனோ, குடிகாரனோ, மனநோயாளியோ என்பது பிரச்சனையில்லை), .... இக்குணங்கள் வலியுறுத்துவது என்னவெனில் நிலவும் சமுக அமைப்பின்- அது எவ்வளவு வர்க்க, பால், ஏற்றத் தாழ்வுகளைக் கொண்டதாயினும்- அநீதிகளுக்குப் பெண் தலை வணங்கிப் போக வேண்டும். ஆண்தான் வழமையாக அவற்றை எதிர்ப்பான். பெண் துணையாக அவற்றை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**தன்னில் பிழை இல்லாவிட்டாலும் கூட கணவன் என்ன தவறு செய்தாலும் பொறுத்து பெண்ணே விட்டுக் கொடுக்க வேண்டும். அவன் மனம் திரும்பி வரும்வரை காத்திருக்க வேண்டும். படங்களில் அவர்கள் மனம் திருந்துவர். நடைமுறை வாழ்வில் இது மிகக் குறைவே. இதைவிட மோசமானது தன்மேல் பாலியற் பலாத்காரம் புரிந்த வில்லனை அந்த ஒரே காரணத்துக்காக திருமணம் செய்து காலமெல்லாம் கண்ணீர் விட வேண்டும் என்பது**

எதிர்க்கலாம். ஆனால் அவள் சுயமாக இயங்கக் கூடாது. தந்தை கணவனில் சார்ந்தே இயங்கவேண்டும். அவளுக்கென்று சுய விருப்பு வெறுப்புகள் இருக்கக் கூடாது. எல்லாவற்றையும் குழிதோண்டிப் புதைத்து விட்டு குடும்ப நலனுக்காக (பெண் தன் நலனை ஏற்கனவே குழி தோண்டிப் புதைத்த பின் குடும்பத்தில் எஞ்சியிருக்கும் ஆணின் நலனே குடும்ப நலனாகக் கொள்ளப்படும்) சடமாக வாழவேண்டும். தன்னில் பிழை இல்லாவிட்டாலும் கூட கணவன் என்ன தவறு செய்தாலும் பொறுத்து பெண்ணே விட்டுக் கொடுக்க வேண்டும். அவன் மனம் திரும்பி வரும்வரை காத்திருக்க வேண்டும். படங்களில் அவர்கள் மனம் திருந்துவர். நடைமுறை வாழ்வில் இது மிகக் குறைவே. இதைவிட மோசமானது தன்மேல் பாலியற் பலாத்காரம் புரிந்த வில்லனை அந்த ஒரே காரணத்துக்காக திருமணம் செய்து காலமெல்லாம் கண்ணீர் விட வேண்டும் என்பது.

பெண்ணுக்குச் சுயமாக ஒரு ஆளுமையும் இருக்கக் கூடாது. பெண்ணின் வாழ்வின் குறிக்கோள் திருமணம் முடித்து குழந்தை பெற்றுக் காலம் பூராகவும் சகோதரங்கள், கணவன் பிள்ளைகளின் நலனுக்காக உழைத்து தேய்ந்து தியாகியாகவும், தெய்வமாகவும் போவதுதான். இவ்வாறு பெண்ணின் உடல், பொருள், உணர்வுகள் அனைத்தையும் சுரண்டி ஏனையவர்கள் சுகபோகத்தில் திளைப்பதற்காக தெய்வம், தியாகம், பண்பாடு என கஷாயத்திற்கு இனிப்பு முலாம் பூசப்படுகிறது. பெண்களும் ஏமாளிகளாக அந்த வலையில் விழுகின்றனர். மேலும் பெண்கள் அறிவு பெற்று விழித்துக் கொள்ளக் கூடாது என்பதற்காகவே அடக்கமான (அதாவது சுரண்டலை எதிர்க்காத) குடும்பப்பாங்கான (படித்து வேலைக்குச் சென்று வெளியுலக அறிவுபெறின் அவள் தான் சுரண்டப்படுவதை இனங்கண்டு கொள்ளக் கூடும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குண நலன்கள் வலியுறுத்தப்படுகிறது.

இவ்வாறான பெண்மாதிரிகள் படைக்கப்பட்டு லட்சியப்படுத்தப்படுவதால் வித்தியாசமான - அறிவுள்ள - சமுக அநீதிகளை எதிர்க்கும் துணிவுள்ள பெண் சமுகத்தால் ஒதுக்கப்படுகிறாள். இதன் விளைவாக அத்தகு நல்ல குணங்களை வரித்து அவற்றை வளர்த்துக் கொள்வதிலிருந்து பெண் தடுக்கப்படுகிறாள். நடைமுறை வாழ்வில் ஒரு பெண்ணின் நியாயமான வாதங்கள் கூட இம்மாதிரியான படப் பாத்திரங்களை உதாரணம் காட்டுவதன் மூலம் அடக்கப்படுகின்றன.

மேலும் பெண் அறிவிற் குறைந்தவளாகவும், 'பெண்புத்தி பின்புத்தி' என்பதை நிருபிப்பவளாயும், ஆழமற்ற சிந்தனையுள்ளவளாகவும் சித்தரிக்கப்படுகிறாள். அவ்வாறின்றி திறமைசாலிகளாக வரும் ஒரிருவர் கூட அப்படக் கதாநாயகர்களை விடத் திறமை குறைந்தவர்கள் என இறுதியில் நிருபிக்கப்படுகிறார்கள். இது படம் பார்க்கும் பெண்களை மனோதத்துவ ரீதியில் உற்சாகமிழக்கச் செய்து பின்னடைய வைக்கின்றன. இவ்வாறு பெண்ணின் ஆளுமை வளர்ச்சியைச் சிதைத்து, அவளின் திறமையை மழுங்கடிக்கும் கைங்கரியத்தைத் திரைப்படங்கள் செய்கின்றன.

## 2. மேலோட்டமான சீர்திருத்தக் கருத்துக்கள்

பெண் தொடர்பான பிரச்சனைகளைக் கையாள்வதன் மூலம் வித்தியாசமானவை எனத் தம்மைக் காட்டிக் கொள்ளும் படங்கள் கூட முடிவில் ஆழ்ந்து நோக்கினால் தாமும் சராம்சத்தில் மற்றப் படங்களைவிட விட வேறுபட்டவையல்ல என நிருபித்துள்ளன. இதற்குக் காரணம் அவை அப்பிரச்சனைகளுக்கான அடிப்படையை ஆராய்ந்து தீர்வை முன்வைக்காமல் மேலோட்டமாக மந்திரத்தால் தீர்வினைப் பிடுங்கி வைப்பதேயாகும். உதாரணமாக சீதனப் பிரச்சனையை ஆராயும் விசுவின் ஒரு திரைப்படம் சீதனம் கொடுக்க நேரும் ஒரு குடும்பம் அதனால் படும் அவதியையும், சீதனம் வாங்குவதில் பெண்களே (மாப்பிள்ளையின் தாய்) முன்னிற்கும் கொடுமையையும் சுட்டிக் காட்டிவிட்டு, எங்கோ இருந்து ஒரு டெல்லி மாமா வந்து சீதனத்தை கொடுத்துத் திருமணம் முடிப்பதையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**பெண் அறிவிற் குறைந்தவளாகவும், 'பெண்புத்தி பின்புத்தி' என்பதை நிரூபிப்பவளாயும், ஆழமற்ற சிந்தனையுள்ளவளாகவும் சித்தரிக்கப்படுகிறாள். அவ்வாறின்றி திறமைசாலிகளாக வரும் ஓரிருவர் கூட அப்படக் கதாநாயகர்களை விடத் திறமை குறைந்தவர்கள் என இறுதியில் நிரூபிக்கப்படுகிறார்கள். இது படம் பார்க்கும் பெண்களை மனோதத்துவ ரீதியில் உற்சாகமிழக்கச் செய்து பின்னடைய வைக்கின்றன**

தீர்வாக முன்வைக்கிறது. இது சீதனம் பெண்ணை இழிவுபடுத்துகிறது என்ற விடயத்தைச் சொல்லாதது மட்டுமல்ல, தீர்வாக மணமகள் எனது பெற்றோரை இப்படிப் பிழிந்து சீதனம் கொடுத்துத் திருமணம் செய்யமாட்டேன் என்று கூறுவதையோ அல்லது மாப்பிள்ளை எனது மனைவியை எனது உழைப்பில் காப்பாற்றுவேன், சீதனம் வேண்டாம் என்று கூறுவதாயோ அல்லது இது போன்ற ஒன்றையோ கூறுவதாக அமையவில்லை. மாறாக சீதனம் என்ற சமுகக் கொடுமை டெல்லி மாமாவின் வருகை மூலம் ஆதரிக்கப்படும் தீர்வு முன்வைக்கப்படுகிறது, அல்லது தனிமனிதரைப் பழிவாங்கும் நடவடிக்கை மூலம் ஒரு சமூகக் கொடுமைக்குத் தீர்வு முன்வைக்கப்படுகிறது.

## 3. எதிர்ப் புரட்சிக் கருத்துக்கள்

முதலில் கூறியபடி லட்சியப் பெண்மாதிரிப் பாத்திரங்கள் பெருந்தொகையாகப் படைக்கப்பட்ட போதும் இடையிடையே ஓரிரு சுயமான பெண் பாத்திரங்கள் படைக்கப்படுகின்றன. அவை சமுக அநீதிகளை எதிர்த்தல், மற்றும் பெண்கள் முகம் கொடுக்கும் பிரச்சனைகளுக்கு எதிராகப் போராடுதல், பெண்ணின் பாரம்பரியப் பங்களிப்பை ஏற்றுக் கொள்ள மறுப்பதாக ஆரம்பத்தில் காட்டப்பட்டாலும், இறுதியில் அவர்கள் ஒன்றில் 'திருந்துவதாக' அல்லது தான் பாரம்பரியமாக வாழாது 'வாழ்வை' இழந்து விட்டதற்காக வருந்துவதாகவும் காட்டப்படுகிறது. உ+ம்: "அவள் அப்படித்தான்"

## 4. வித்தியாசமான படங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**திரைப்படங்கள் பெண்கள் மட்டும் பாரம்பரியமாக வாழ்ந்தது போலவே வாழவேண்டும் என வலியுறுத்துகின்றன. கால ஓட்டத்தில் சமுகத்தில் பெண்களின் நிலைமைகளில் ஏற்பட்ட மாற்றங்களை (கல்வி, வேலைவாய்ப்பு) - அதனால் ஏற்பட்ட பிரச்சனைகளை திரைப்படங்கள் போதியளவு பிரதி பலிக்கவில்லை. சமுதாயத்தின் அரைவாசியான பெண்களின் வாழ்வில் ஏற்படும் தேக்கம் மொத்த சமுதாய முன்னேற்றத்தையும் பாதிக்கிறது**

பெரும்பான்மையான படங்கள் இருக்கும் சமுக அமைப்புக்கு முட்டுக்கட்டை கொடுத்த போதும் அவ்வப்போது வித்தியாசமான படங்களும் வெளிவருகின்றன. இவை விதவா விவாகம், மோசமான கணவர்களை விட்டுவிலகும் பெண்கள், பெண் தொழிலாளிகள்- வேலைக்குப் போகும் பெண்களின் பிரச்சனைகள், ஆண்- பெண் உறவை பாரம்பரிய பாலியல் அடிப்படையில் அல்லாமல் நட்பு அடிப்படையில் சித்திரிப்பது போன்ற விடயங்களைக் கருப்பொருளாகக் கொண்டுள்ளன. "புதுவசந்தம்", "ஒருவீடு இருவாசல்" என்பவற்றை உதாரணமாகக் கொள்ளலாம்.

பெண்கள் பிரச்சனைகள் பெண்கள் பார்வையில் அணுகப்படாமைக்கு முக்கிய காரணம் திரைப்படத் துறை (குறிப்பாக கதை, வசனம், நெறியாள்கை, பாடல்கள் போன்றவை)
ஆண்களால் செய்யப்படுவதாகும். இப் போக்கு காலப்போக்கில் மாறக்கூடும். உ+மாக சுஹாசினியின் "பெண்" எனும் தொலைக் காட்சித் தொடரானது பெண்களின் வேறுபட்ட பிரச்சனைகளைக் காட்டுகிறது.

தொகுத்துக் கூறின் திரைப்படங்கள் பெண்கள் மட்டும் பாரம்பரியமாக வாழ்ந்தது போலவே வாழவேண்டும் என வலியுறுத்துகின்றன. கால ஓட்டத்தில் சமுகத்தில் பெண்களின் நிலைமைகளில் ஏற்பட்ட மாற்றங்களை (கல்வி, வேலைவாய்ப்பு) - அதனால் ஏற்பட்ட பிரச்சனைகளை திரைப்படங்கள் போதியளவு பிரதி பலிக்கவில்லை. சமுதாயத்தின் அரைவாசியான பெண்களின் வாழ்வில் ஏற்படும் தேக்கம் மொத்த சமுதாய முன்னேற்றத்தையும் பாதிக்கிறது. அத்துடன் அவர்கள் வளர்க்கும் எதிர்கால சந்ததியினரின் அறிவு, ஆளுமை வளர்ச்சியை முடக்குகிறது.■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





"தமிழர்கள் வறுமையிலிருந்து வசதியைத்தேடி வரவில்லை; பசித்த வயிற்றுக்கு வயிறார உணவு தேடிவரவில்லை; வேலைகிடைக்காத தேசத்திலிருந்து ஒரு நல்ல வேலையை தேடி வரவில்லை; அவர்கள் வந்ததெல்லாம் தங்கள் உயிரை ஆபத்திலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்காகத்தான். வார்டோதான் அவர்களின் பாதுகாப்பு; ஆனால் எதிர்காலம் பற்றிய அவர்களின் நம்பிக்கை இலங்கையில்தான்"

ஒரு நோர்வீஜீயப் பத்திரிகையாளரின் பார்வையில் வார்டோத் தமிழர்கள்

# இன்னொரு மண்ணில் இன்னொரு வாழ்வு

நோர்வீஜிய மூலம்: Rie Bistrub	தமிழ்ச் சுருக்கம்: மாலா

*வார்டோ!*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நோர்வேயின் வட எல்லைப்புறத்தில் வருடத்தில் அரைவாசிக்காலம் சூரியனைத் தொலைத்து கரிய இருளிலும், கடும்குளிரிலும் உறைந்துபோயிருக்கும் ஒரு சிறிய கிராமம்தான் இந்த வார்டோ. கடலுக்கடியிலான பாதை மூலம் அடுத்த கிராமத்துடன் தொடர்புடைய வார்டோவில் கடும் பனிப் புயல்களும், வழக்கத்திற்கு மாறான காலநிலையும் வழமையானது. சொந்த நாட்டவரே நள்ளிரவு சூரியனை பார்ப்பதற்கு மட்டும் சென்றுவரும் கிராமத்தில் இயற்கை அழகையும்,இதமான காலநிலையையும் கொண்ட இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்த தமிழர்கள் குடும்பத்துடன் வாழ்கிறார்கள்.

ஏறத்தாழ மூவாயிரம்பேர் வாழும் இக்கிராமமானது கடந்த நான்கு வருடங்களாக இலங்கையிலிருந்து புகலிடம் நாடிவந்த தமிழர்களுக்கு தனது எல்லையினைத் திறந்து வரவேற்று, அவர்களுக்கு வசிப்பிடம், தொழில் ஆகியவற்றை வழங்கி அவர்களுக்கு வாழ்வளித்துள்ளது. தங்கள் சொந்த நாட்டைப்பற்றி கனவுகளுடன், சிறியவர்களும் பெரியவர்களுமாக, எழுபது தமிழர்கள் இங்கே வாழ்கிறார்கள்.

கடுமையான காலநிலையினைக் கொண்ட இந்தப் புதிய உலகத்தினையும், தங்கள் அயலவர்களான நோர்வீஜியர்களையும் புரிந்து கொள்ளவும், பழக்கப்படுத்திக் கொள்ளவும் இவர்கள் கடுமையாக உழைக்கிறார்கள். பெரும்பாலான பிரச்சினைகளை, தங்களுக்கே உரித்தான மலர்ச்சியான சிரிப்புடன் எதிர்கொள்கிறார்கள்.

ஆயிரத்தி தொளாயிரத்தி எண்பத்தேழில் இங்கு வந்த பாலா குடும்பத்தின் வீடு கிட்டத்தட்ட ஒரு சன சமூக நிலையம்போல செயற்படுகிறது. இக்கிராமத்திற்குப் புதிதாக வரும் தமிழர்களுக்கு, தங்கள் குறைகளையும், தங்கள் தனிமைத் துயரங்களையும், தாயகச் சோகங்களையும் பகிர்ந்துகொள்வதற்குமான ஒரு ஆதரவு நிலையமாக இவர்களின் வீடு அமைகிறது. இங்கு புகலிடம்கோரி வரும் தமிழர்கள் வறுமையிலிருந்து வசதியைத்தேடி வரவில்லை; பசித்த வயிற்றுக்கு வயிறார உணவு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேடிவரவில்லை; வேலைகிடைக்காத தேசத்திலிருந்து ஒரு நல்ல வேலையை தேடி வரவில்லை; அவர்கள் வந்ததெல்லாம் தங்கள் உயிரை ஆபத்திலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்காகத்தான். வார்டோதான் அவர்களின் பாதுகாப்பு; ஆனால் எதிர்காலம் பற்றிய அவர்களின் நம்பிக்கையோ இலங்கையில்தான்.

பாலா சாரதியாகவும், பாலாவின் மனைவி சிவகாந்தம் மீன்களைச் சுத்தப்படுத்துபவர்களாகவும் ஒரே மீன் பதப்படுத்தும் தொழிற்சாலையில் பணிபுரிகிறார்கள். இவர்களின் புதல்விகளான சங்கீதாவும், ஹேமாவும் வார்டோ சிறுவர் பாடசாலைக்குச் செல்பவர்கள். சாதாரணமாக நோர்வீஜியர்களையே சிரமப்படுத்தும் இக்கிராமத்தின் குளிர்காலத்தையும் இவர்கள் சிரித்தபடியே ஏற்றுக்கொண்டு தங்கள் வாழ்வை வாழ்கிறார்கள்.

தொழிற்சாலையில், சிவகாந்தத்தின் நடனமாடும் விரல்கள் வெகுதிறமையுடன் வேகமாக மீன்களை துப்பரவு செய்கின்றன. அவரருகில் நிற்கும் ஜெயா என்னும் தமிழர் சிவகாந்தத்தின் வேகத்துடன் போட்டிபோட முயற்சிக்கிறார். ஆனால் விரல்களின் சுறுசுறுப்புக்குப் பரிச்சயப்படாத ஒரு ஆணான அவரால் முடியாமலிருக்கிறது. இவ்வேலையை பெண்களும் தங்களுக்கு ஈடான வேகத்தில் வேலை செய்வதால் தான் நோர்வீஜிய ஆண்கள் இத்தொழிலை, வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருந்தாலும், ஒரு 'கௌரவம்' குறைந்த தொழிலாகக் கருதி ஒதுக்கி வருகிறார்கள். ஆனால் தமிழ் ஆண்கள் இதனை ஒரு கௌரவக் குறைவான தொழிலாகக் கருதுவதில்லை.

இப்பிரிவில் மேற்பார்வையாளராக கடமையாற்றும் மாக்டா, தமிழர்களை நல்ல உழைப்பாளிகளாக கருதுகிறார். ஆனால் அவர்கள் நோர்வீஜிய மொழியை நன்கு பேசக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று அபிப்பிராயப்பட்டார்.

நீங்கள் எவ்வளவு உழைக்கிறீர்கள் என்று சிவகாந்தத்திடம் நான் கேட்டபோது, "நான் கடுமையாக வேலை செய்தால் மணித்தியாலம் நூறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குரோணர் மட்டில் சம்பாதிக்கிறேன்... இது என் கணவர் சம்பாதிப்பதிலும் பார்க்க அதிகமானது" என்றார்.

இது பாடசாலை விடுமுறைக்காலமாகையால் ஹேமாவும் சங்கீதாவும் சிறுவர்களுக்கான தமிழ்ப் புத்தகங்களுடன் ஒன்றிப்போயிருக்கிறார்கள். வார்டோ நூல்நிலையம் இருநூறு தமிழ்ப் புத்தகங்களை இங்கு வாழும் எழுபது தமிழர்களுக்காக வாங்கியுள்ளது என்று பெருமைப்பட்டுக்கொண்டார் புகலிடம் கோருவோர் ஆலோசகராகப் பணிபுரியும் குநுட் ஸ்ரென்ஹாக். அவர் மேலும் குறிப்பிடுகையில் வார்டோவில் பாடசாலைக்குச் செல்லும் தமிழர்கள் நோர்வீஜிய மொழியுடன், நோர்வீஜிய சமுகத்தைப்பற்றி அறிந்து கொள்ளும் விதத்தில் சமுக விஞ்ஞானம், சுகாதார விஞ்ஞானம், உணவுப் பழக்கங்கள் போன்ற எல்லா விடயங்களைப் பற்றியும் கற்று வருகிறார்கள் என்றார்.

◙ ◙ ◙ ◙

மாலை பாலாவின் வீட்டுக்கு ஒரு சம்பிரதாயமற்ற விஜயம். கதவைத் தட்டியதும் பிரகாசமும் மலர்ச்சியும் மிகுந்த ஒரு உலகத்தின் கதவுகள் திறக்கப்படுகின்றன. விருந்துக்கான உடையணிந்து சிரித்த முகத்துடன், ஆனால் மௌனமாக காணப்படும் மனிதர்கள். ஒரு வார்த்தையினையும் உதிர்க்காமல், சேலையணிந்த பெண்கள் நல்வரவுகாட்டும் சிரிப்பைத்தான் உதிர்க்கிறார்கள். விதம்விதமான வடிவங்களில் பலகார வகைகள் வைக்கப் பட்டிருக்கின்றன. ஆண்கள் ரெலிவிசன், ஸ்ரீரியோவுடன் ஒன்றியபடி இருக்கிறார்கள். குழந்தைகள் ஒரு புறமாக நிற்கிறார்கள். வெண்மையான புன்சிரிப்புகள் அந்த அறையினை நிறைக்கின்றன; ஆனால் வாய்திறந்து ஒரு வார்த்தையினையும் காணோம்!


"இங்கு எங்களுக்கு வேலையிருக்கிறது; சுதந்திரம் இருக்கிறது.. உங்களைப் போலல்லாது நெருக்கமான குடும்ப உறவுகளைக் கொண்டவர்கள் நாங்கள்.. எங்கள் அன்புக்குரியவர்களினருகில் நாங்கள் இல்லாமலிருப்பது வேதனையானது." என்னும் பாலா குடும்பத்தினரின் கனவுகளும், நம்பிக்கைகளும் அவர்களின் தாயகம்தான்.■ (நன்றி: Aftenposten)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## சீனாவும் சக்தியும்

சக்தி 1.2 இல் சீனத்தின் பெண்சிங்கம் பற்றிய குறிப்பில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.சில நூாற்றுக்கணக்கானோரே இறந்தனர் என்பதை மேலைநாட்டுப் பிரச்சார நிறுவனங்கள் கூடப் போன வருட முடிவின் முன் ஒப்புக் கொண்டதன் பின்பும், ஆதாரமில்லாத பழைய பிரச்சாரத்தை மீணடும் உண்மை என்றவாறு கூறுவது நியாயமில்லை. சீனாவில் நடப்பது பற்றி பலருக்கு கருத்து முரண்பாடு உண்டு. ஆயினும் தியன் ஆனமென் சம்பவத்தின் முழுப் பின்னணியையும் ஆராயாமல் டெங்கை எதிர்ப்பதற்காகவோ சீனாவின் சமகால நிலைப்பாட்டை நிராகரிப்பதற்காகவோ சீன அரசை எதிர்த்தவர்களை சனநாயகவாதிகளாகக் காண்பதும், அவர்களது போராட்டத்தை அடக்கு முறைக்கு எதிரான போராட்டமாக காட்டுவதும் முழுமையற்றது. சனநாயக மாணவ வீரர்கள்என்று புகழப்பட்ட பல மாணவ தலைவர்களின் வேஷங்கள் சீனாவிலிருந்து வெளியேறிய சில நாட்களிலேயே கலைந்து விட்டன. ஆண்சிங்கங்களாயினும் பெண்சிங்கங்களாயினும் அவர்கள் எந்த நோக்குடன், எந்த வர்க்க நிலைப்பாட்டிலிருந்து சீன அரசை எதிர்த்தார்கள் என்பதையும் விளங்கிக் கொள்வதும் கூடிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பொருத்தமுடையது. சீன அரசைப் பல்வேறு காரணங்களுக்காக எதிர்த்தவர்கள் உள்ளனர். இவர்களில் யாருடன் நீங்கள் ஐக்கியப்பட முற்படுகிறீர்கள் என்ற தெளிவு அவசியம். சீனாவில் இன்று சாத்தியமாகக் கூடிய மாற்றம் என்ன? அதன் விருத்தி எத்தகையதாக இருக்க வேண்டும்? இவை முக்கியமான கேள்விகள்.

நோபல் பரிசிற்கு சாய் லிங்கின் பெயரும் தெரிவு செய்யப்பட்டது பற்றி: தலாய் லாமாவிற்கு நோபல் பரிசு கிடைத்தது, சதாத்திற்கு கிடைத்தது. கொலைகாரன் பெகினுக்கும் அதில் பங்குண்டு. சரணாகதியடைந்த கொர்பச்சோவிற்கும் கிடைத்திருக்கிறது. யாருக்கு ஏன், எப்போது பரிசு கிடைக்கிறது என்று கவனித்தால் அதன் சூட்சுமம் புரியும்.

எவரும் சீனா பற்றி விமர்சிப்பது தவறல்ல. எனினும் அரைகுறையான தகவல்களை விட ஆழமான ஆய்வின் அடிப்படையிலான விமர்சனங்கள் பயனுள்ளவை.

**சி.சிவசேகரம்,**
**இலண்டன்.**

## தவறு எங்கே இருக்கிறது?

முதலாவது சக்தியில் வெளிவந்த 'நமது கடமை' பகுதியில் (10ம் பக்கம்) 'வெளிநாட்டில் வெளிவரும் சஞ்சிகைகள் ஆண்களின் கருத்துக்களையே கொண்டுள்ளன' என்றும், ஆண்களின் பார்வையில் பெண்களின் பிரச்சனைகளை தெரிவிப்பன என்றும், அதேநேரம் தப்பித்தவறி வரும் பெண்களின் ஆக்கங்களும் (ஒருசிலதவிர) ஆணாட்சிக்கு ஆலவட்டம் பிடிப்பனவாக உள்ளன என்றும் அவரே ஏற்றுக் கொள்கிறார். இக் கருத்துக்களைப் தொகுத்துப் பார்த்தால் தவறு எங்கே இருக்கிறது என்று புரியும்.

ஆணாதிக்கம் என்பது திணிக்கப்பட்டது மட்டுமல்ல, 'ஏற்றுக் கொள்ள'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வைக்கப்பட்டதுமாகும். அதாவது கலாச்சாரம், சமுக நடைமுறை என்ற தளங்களில் பெண்களை கருத்தியல் ரீதியில் ஏற்றுக் கொள்ளும்படி செய்யப்பட்டதுமாகும். எனவேதான் அத் தளத்தில் நின்று கொண்டே சற்று வித்தியாசமாக சிந்திக்க (அல்லது எழுத) துணியும் சிலரும் கூட (தமக்கு தெரிந்தோ தெரியாமலோ) ஆணாட்சிக்கு ஆலவட்டம் பிடிக்கிறார்கள் என்பது புலனாகும். இதேபோல ஆண்கள் சிலரின் படைப்புகளும் வெளிவருகின்றன.

ஒட்டுமொத்தமாகவே ஆண்களின் கருத்துக்களையும் கண்ணோட்டங்களையும் கொண்டே பத்திரிகைள் வெளிவருகின்றன என்பது குறைப்பார்வையாகும். இங்கு எஞ்சுவது ஆண் எதிர்ப்பே! மேற்கூறியவகை படைப்புகள் வெளிவரும்போதே விமர்சனங்களை முன்வைத்து, விவாதித்து சரியான கருத்துக்களுக்கு வந்தடைய உழைப்பதே பிரியோசனமானது. ஆண், பெண் என அணிபிரிந்தல்ல!

மனிதம் சஞ்சிகையில் சக்தி
பற்றிய விமர்சனத்தின் ஒரு பகுதி

## சக்தியின் சரளமற்ற தமிழ்?

சக்தியை மேலோட்டமாக வாசித்தபோது அதன் எழுத்து நடைபற்றி எனக்கு ஏற்பட்ட முதல் அபிப்பிராயம் இது:
சக்தியில் வெளிவந்த சில கட்டுரைகளில் பாவிக்கப்பட்ட சில சொற்றொடர்கள் ஆங்கில சொற்றொடர்களை மனதில் கொண்கு வலிந்து புனையப்பட்டன போல் தோற்றமளித்தன. இவை தமிழில் இயைபுபடாமல் நெருடுவதால் கட்டுரைகள் வாசிப்பதற்கு கடினமாக உள்ளன.

வசந்தா,
ஐ.அமெரிக்கா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஈராக்கியர்களுக்கு ஒரு அவசியமில்லாத தண்டனை; பாலஸ்தீனியர்களுக்கு ஒரு பின்வாங்கல்; அரபு உலகத்திற்குள் ஆழமான ஒரு பிளவு; இஸ்ரேலுக்கு ஒரு சந்தர்ப்பம்; அமெரிக்காவுக்கு ஒரு புதியதளம்; மேற்குலகின் கபடத்தனத்திற்கு ஒரு பெரிய வெற்றி

# முட்டாள்கள் மூட்டிய போர்நெருப்பு

சிவாஜி சுப்பிரமணியம்

தலைவிதி என்று ஒன்றிருப்பதை நம்பவேண்டும் போலிருக்கிறது. ஒருசில தனிமனிதர்களின் முட்டாள்த்தனமான முடிவுகளால் ஒருபாவமும் அறியாத ஒரு தேசத்தின் மக்கள் உயிரையிழந்து, உடமைகளை இழந்து அவஸ்தைப்படுவதை வேறு என்னவென்றுதான் சொல்வது?

எட்டுவருடங்களாக ஈராக் ஈரானுடன் நடத்திய யுத்தத்தின் காயங்கள் முற்றாக இன்னும் ஆறவில்லை; அதற்குள் இன்னொரு யுத்தம். இம்முறை எந்த அமெரிக்காவின் ஆதரவுடன் ஈனத்தனமான ஒரு யுத்தத்தை ஈரானுக்கெதிராக நடத்தியதோ, எந்த மேற்குநாடுகளின் உதவியுடன் தனது இராணுவத்தின் ஆயுத பலத்தை அதிகரித்ததோ அந்த நாடுகளுடன் ஈராக் ஒரு அவசியமில்லாத ஒரு யுத்தத்தை ஆரம்பித்தது. இந்த இரண்டு யுத்தங்களும் ஈராக்கின் சர்வாதிகாரியான சதாம் குசைனாலேயே ஆரம்பிக்கப்பட்டன; இரண்டு யுத்தங்களும் சதாமின் சொந்த அரசியல் செல்வாக்கை அதிகரிப்பதற்காகவே ஆரம்பிக்கப்பட்டன. இரண்டு யுத்தங்களிலும் அதை ஆரம்பித்த சதாமே யுத்தநிறுத்தத்தை இரக்க வேண்டியதாயிற்று. இரண்டு யுத்தங்களிலும் பல்லாயிரக்கணக்கான ஈராக்கியர்கள் உயிரையிழந்தனர்; நாட்டின் பொருளாதாரம் நொறுங்குண்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேசம் நலிந்தது. ஆனால் இரண்டு முட்டாள்த்தனமான யுத்தங்களின் பின்னரும் சர்வாதிகாரி சதாம் குசைன் நாட்டின் தலைவராகவே இருந்து வருகிறார்.

ஈரான்-ஈராக் யுத்தத்தின்போது, தனது ஆதரவரளரான ஷாவின் ஆட்சியைக் கவிழ்த்த கொமேனி தலைமையிலான ஈரானைப் பழிவாங்குவதற்காக ஈராக்கை அமெரிக்கா பலமாக ஆதரித்தது. சதாம் குசைன் ஈரானியப் போர்வீரர்களையும், ஈராக்கின் வடபகுதியில் வாழும் குர்திஸ் சிறுபான்மையினரையும் இரசாயன ஆயுதங்களைப் பாவித்தது குரூரமாக கொன்றழித்தபோதும்கூட வாயைத் திறக்காத அமெரிக்க அரசு, இப்போது சர்வாதிகாரி சதாம் குசைன் அயலில் இருந்த குட்டிநாடான குவைத்தினைத் தாக்கி ஆக்கிரமித்து ஈராக்கின் பத்தொன்பதாவது மாகாணமாகப் பிரகடனப்படுத்தியதும் கொதித்தெழுந்து 'தர்மயுத்தத்தில்' இறங்கிவிட்டது. மத்திய கிழக்கின் எண்ணை வளத்தின்மீது பெருமளவு ஆதிக்கத்தை சதாம் குசைன் பெற்றுவிட்டால் எண்ணெய் விலையை பெருமளவு உயர்த்தி, தங்கள் பொருளாதாரத்தை ஆட்டுவிக்கக்கூடும் என்ற அச்சமே கணிசமான அளவு குவைத்தின் எண்ணையை நம்பியிருந்த அமெரிக்காவையும் அதன் கூட்டாளிகளையும் -"ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் காப்பதற்காக"- இந்த யுத்தத்தில் குதிக்க வைத்த உண்மையான காரணமாகும்.

குவைத்தை ஆக்கிரமித்தமைக்கான காரணங்களைக் கண்டுபிடிக்க சதாம் குசைன் மிகுந்த சிரமப்பட வேண்டியிருந்தது. தனது எண்ணை ஊற்றுக்களிலிருந்து குவைத் எண்ணெய் திருடுகிறது; எண்ணெய் விலையை உயர்த்துவதற்கு ஒத்துழைப்புத் தர மறுக்கிறது; வரலாற்று ரீதியாக குவைத் இராக்கிற்குச் சொந்தமானது என்றெல்லாம் அவர் காட்டிய காரணங்களை பொதுவாக உலகம் பகிடியாகவே கருதியது. ஈரானுடன் எட்டுவருடங்களாக நடாத்திய யுத்தத்தினால் ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடியும், கடன் தொல்லைகளுமே குவைத்தை அபகரிக்கத் தூண்டிய பிரதானமான காரணமாகும். மேலும் தனது ஆட்சியில் சலிப்படைந்து போனவர்களின் கவனத்தைத் திசைதிருப்புவதும் சதாம் குசைனுக்குத் தேவையாயிருந்தது. குவைத்தைச் சொந்தமாக்குவதன் மூலம் பொருளாதாரத்திலும் இராணுவபலத்திலும் மத்திய கிழக்கின் பெருஞ் சக்தியாக தான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உருவெடுப்பதும், அதனூடாக மறைந்த எகிப்தியத் தலைவர் கமால் அப்துல் நாசருக்குப் பிறகு இன்னமும் நிரப்புப்படாமலிருக்கும் அரபுலகத் தலைவர் பதவியை அடைவதும் சதாம் குசைனின் கனவாக இருந்தது. இப்படி எல்லா மாங்காய்களையும் ஒரே கல்லில் வீழ்த்துவதற்காகவே சதாம் குவைத்தை ஆக்கிரமிக்கத் தீர்மானித்தார்.

மத்திய கிழக்கில் தனது வளர்ப்புப் பிள்ளையான இஸ்ரேலுக்கு அபாயத்தை ஏற்படுத்தவல்ல ஒரு சக்தி உருவாவது என்றுமே அமெரிக்காவுக்குப் பிடிக்காத விடயம். ஈரான்-ஈராக் யுத்தத்தின் பின் மத்திய கிழக்கின் வலிமையான இராணுவ இயந்திரமாக ஈராக் உருவாகி வருவதை அமெரிக்கா மிகுந்த கவலையுடன் அவதானித்து வந்தது. இருப்பினும் நேரடியான ஒரு காரணமில்லாமல் ஈராக்குடன் முரண்பட்டு அதன் பலத்தைக் குறைப்பது சாத்தியமில்லாமலிருந்தது. அணுக்குண்டுத் தயாரிப்பின் உச்சத்தை ஈராக் அடைந்துவிட்டதாகவும் தகவல்கள் வரத்தொடங்கின. இந்நிலையில் ஈராக்கின் குவைத் மீதான ஆக்கிரமிப்பானது அமெரிக்காவுக்குத் தேவையான ஒரு காரணத்தை வழங்கியது. காலந்தாழ்த்தினால் பல்வேறு விதமான தலையீடுகள் வந்து தன் திட்டத்தில் மண்ணை வாரிக் கொட்டிவிடும் என்று கணக்கிட்ட அமெரிக்கா அவசரஅவசரமாக காரியத்தில் இறங்கியது. (ஈராக்கை இந்தப் பொறியில் வீழ்த்துவதற்காக, குவைத்மீது ஈராக் படையெடுத்தால் "அது உங்களின் சொந்த விசயம்; நாங்கள் தலையிடமாட்டோம்" என்கிற விதத்தில் அமெரிக்க இராஜதந்திர வட்டாரங்கள் பாவனை செய்ததாகவும், அதனை நம்பியே குசைன் குவைத் மீது படையெடுத்ததாகவும், பின்னர் அமெரிக்காவின் திட்டம் புலனாகியதும் குவைத்திலிருந்து பின்வாங்கினால் எங்கே தன்மீது அரபு உலகம் கொண்டிருக்கும் அபிமானம் போய்விடுமோ என்ற அச்சத்தில் யுத்தம் வரைக்கும் செல்ல குசைன் முடிவெடுத்ததாகவும் உத்தியோக பூர்வமற்ற ஒரு கருத்துண்டு.)

அமெரிக்கா இவ்வாறு செயற்படலாம் என்று சதாம் எதிர்பார்த்திருந்தார் என்றே கருதப்படுகிறது. அதன்காரணமாகவே, ஏனைய அரபுநாடுகளின் ஆதரவைப் பெறுவதற்காக 'கைப்பற்றிய பாலஸ்தீனப் பிரதேசங்களிலிருந்து இஸ்ரேல் வெளியேறவேண்டும்' என்ற கோரிக்கையைச் சேர்த்துக் கொண்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேலும் சாத்தான்களுக்கு எதிராக தான் ஒரு இஸ்லாமிய புனிதயுத்தம் ஒன்றில் ஈடுபடப்போவதாக காட்டிக்கொண்டார். இது இஸ்லாமிய மதத்தீவிரவாதிகளை வீறுகொண்டெழச்செய்யும்; அதனால் தன்னை விரும்பாத சிரிய நாட்டுத் தலைவர் அஸாத், எகிப்தியத் தலைவர் முபாரக் போன்றவர்கள்கூட மக்களின் எழுச்சியினால் தனது பக்கம் சேர்வதற்காக நிர்ப்பந்திக்கப்படுவார்கள் என்றே எதிர்பார்த்தார். இஸ்ரேலின்மீது ஏவுகணைகளை ஏவி, அதன் மூலம் இஸ்ரேலை யுத்தத்திற்கு இழுப்பதன் மூலம் இஸ்ரேலை தங்கள் பொது எதிரியாகக் கருதும் அரபு நாடுகள் தனக்கு ஆதரவளிக்கும் என்று எதிர்பார்த்தார். சதாமின் இந்தத் திட்டம் எல்லா இஸ்லாமிய நாடுகளிலும் ஓரளவுதான் வெற்றிகரமாகச் செயற்பட்டது என்று கூற வேண்டும். பல்லாயிரக் கணக்கான மக்கள் சதாம் ஆதரவுக் கோசங்களுடன் ஊர்வலங்களை நடாத்திய போதும், பாலஸ்தீன விடுதலை இயக்கத்தையும், தயங்கித் தயங்கி ஆதரித்த ஜோர்தானையும் தவிர வேறு எந்தவொரு அரபு நாடும் சதாமுக்கு வெளிப்படையாக உதவ முன்வரவில்லை. இவர்களின் ஆதரவும் சதாமுக்கு இராணுவ ரீதியில் பெருமளவு பயனுள்ளதாக அமையவில்லை.

அமெரிக்கா இந்த யுத்தத்தினை முற்றுமுழுதாக தனது யுத்தமாகக் காட்டிக்கொள்ள விரும்பவில்லை. யுத்தத்தினால் ஏற்படும் இழப்புக்களையும், செலவுகளையும் பகிர்ந்து கொள்வதற்கும், அமெரிக்காவின் வெளிவிவகாரக் கொள்கை தொடர்பாக கண்டிப்பான விமர்சனங்களை வைப்பவர்களின் வாயை அடைப்பதற்கும், பக்கத் துணையாக பதினாறு நாடுகளைச் சேர்த்துக் கொண்டது. இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபையை தனது சொந்த நிறுவனம்போல் பயன்படுத்தியமை வரலாற்றில் முக்கியமானதோர் கேவலச் செயலாகும். வழமையான பிரச்சினைகளின்போது மிகுந்த சோம்பேறித்தனத்துடன் நடந்து கொள்ளும் ஐ.நா. சபையானது அமெரிக்காவுக்கு ஒரு காரியமாக வேண்டியிருந்ததும் அசுரவேகத்தில் செயற்பட்டு ஈராக்கின்மீது யுத்தம் நிகழ்த்துவதற்கான அங்கீகாரத்தை வழங்கியது. கிட்டத்தட்ட கால் நூற்றாண்டு காலமாக மேற்குக் கரையோரம், காஸாப் பிரதேசம் ஆகியவற்றைக் கைப்பற்றி அங்கு வாழும் பாலஸ்தீனர்களை சொல்லொணாக் கொடுமைக்குள்ளாக்கும் இஸ்ரேலுக்கெதிராக இதுவரை எந்தவிதமான ஆக்கபூர்வமான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நடவடிக்கையும் எடுக்காத ஐ.நா.சபை, நிறவாத வெறியர்களான தென்னாபிரிக்க வெள்ளையரசுக்கெதிராக பொருளாதாரத் தடையே போதுமானது என்று திருப்திப்படும் ஐ.நா.சபை ஜனவரி பதினைந்தாம் திகதிக்குள் ஈராக் குவைத்தைவிட்டு வெளியேறாவிட்டால் யுத்தம்தான் என்று போர் முழுக்கம் செய்தது.

இரவு பகலாக நடந்த குண்டு வீச்சினால் ஈராக் நிலைகுலைந்து நின்றபோதும் "வெற்றி அல்லது வீரமரணம்" என்று வீர முழக்கம் செய்த சதாம் குசைன் தரையுத்தம் ஆரம்பித்ததும் துப்பாக்கியை உயர்த்தாமலே பல்லாயிரக்கணக்கான ஈராக்கிய இராணுவ வீரர்கள் எதிரியிடம் சரணடையத் தொடங்கியதும் தனது நிலையை உணர்ந்து கொண்டார். தன் பதவியையும் உயிரையும் காப்பாற்றிக்கொள்ள தன் தோல்வியினை ஒப்புக் கொண்டு குவைத்திலிருந்து வெளியேறச் சம்மதித்தார். "இஸ்ரேல் கைப்பற்றிய பிரதேசங்களிலிருந்து வெளியேறினால்தான் நான் குவைத்திலிருந்து வெளியேறுவேன்" என்று சூளுரைத்தவர் தனது தலைக்கு ஆபத்து வந்ததும் பாலஸ்தீனியர்களையும், அவர்களின் பிரச்சினைகளையும் காற்றில் பறக்க விட்டார். தன் உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அமெரிக்காவிடமும், மேற்கு நாடுகளிடமும் தஞ்சம் கோரியிருக்கும் சோவியத் யூனியன் முன்னரைப் போல் தனக்கு உதவும் என்று சதாம் எதிர்பார்த்தார் என்று ஒரு கருத்துண்டு. உள்நாட்டில் உடைந்துபோயிருக்கும் தனது செல்வாக்கைக் காப்பாற்றவும் மத்திய கிழக்கில் சோவியத்தின் செல்வாக்கை அதிகரிப்பதற்காகவும் கடைசி நேரத்தில் குர்பர்ச்சேவ் பிரச்சினையை எட்டிப் பார்த்தாலும், யுத்த வெறியர்களான அமெரிக்கக் கூட்டணியின் தீர்மானங்களை பாதிக்குமளவு அவரால் எதனையும் செய்ய முடியவில்லை; தீவிரப் பிரயத்தனங்களை எடுத்து மேற்கு நாடுகளினைப் பகைத்துக் கொள்ளவும் சோவியத் யூனியன் விரும்பவில்லை என்பதே உண்மை. மேலும் ஈராக்கின் பெரும்பான்மையினரான சியா முஸ்லீம்களினதும், சிறுபான்மையினரான குர்திஸ் மக்களின் எதிர்ப்பும், சதாம் குசைனின் தோல்விக்குத் துணைசெய்திருக்கிறது.

அமெரிக்கக் கூட்டணியைப் பொறுத்தவரையில் அமெரிக்காவுக்கு அடுத்ததாக பிரிட்டன்தான் வெகுமும்மரமாக இந்த யுத்தத்தில் பங்குபற்றியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேண்டாவெறுப்பாகவே பிரான்ஸ் பின் கட்டங்களில் பங்கெடுத்துக்ககாண்டது. ஈரானுடன் ஈராக் நடாத்திய யுத்தத்தில் வெளிப்படையாகவே ஈராக்கின் திறைசேரியாக விளங்கிய சவூதி அரேபியா, குவைத்துக்கு அடுத்ததாக ஈராக்கின் பலி தானே என்பதையறிந்து இந்த யுத்தத்தில் முழுமூச்சாக ஈடுபட்டது. அமெரிக்காவின் பிச்சையையே நம்பியிருக்கும் எகிப்தும், ஈராக்கின் பரம விரோத நாடான சிரியாவும் இந்த யுத்தத்தில் பங்குகொண்ட முக்கிய அரபு நாடுகளாகும். ஈராக்கிற்கெதிராக உலக நாடுகள் நடாத்தும் யுத்தம் இது என்று சொல்லிக் கொண்டாலும் இது அமெரிக்காவின் யுத்தமாகவே கருதப்பட்டுள்ளது. "நானுங்கூட நானுங்கூட" என்று முண்டியடித்துக்கொண்டு பங்கெடுத்துக்கொண்ட பிரித்தானியாவைப் பற்றிக்கூட கதைப்போரில்லை. அமெரிக்காவுக்கு அடுத்தாக இந்த யுத்தத்தினால் நன்மையடைந்த நாடு இஸ்ரேல்தான். தனது பலம்மிக்க விரோதியான ஈராக்கின் வீழ்ச்சியைப்போல் இஸ்ரேலுக்கு நிம்மதியைக் கொடுக்கும் விசயம் வேறு எதுவுமில்லை. அதுமட்டுமல்லாமல், அதன் நிரந்தரத் தலையிடியான பாலஸ்தீன விடுதலை இயக்கம் ஈராக்கினை ஆதரித்ததால் சர்வதேச அரங்கிலிருந்து அவ்வியக்கத்தை சிறிது காலமாவது ஒதுக்கி வைக்கும் வாய்ப்பினைப் பெற்றுள்ளது. இந்த யுத்தத்தின் மூலம் நிகழ்ந்த சேதங்களைக் காரணங்காட்டி கோடிக்கணக்கில் நிதியுதவியினையும் ஆயுதங்களையும் மேற்கு நாடுகளிடமிருந்து பெற்று தனது இராணுவத்தை அதிகரித்துள்ளது. அமெரிக்காவின் ஆலோசனையின் பேரிலேயே இது சண்டையில் பங்கு பெறாதிருந்தது. சண்டையில் இஸ்ரேல் பங்கு பற்றினால் அமெரிக்காவின் அணியிலிருக்கும் எகிப்து, சிரியா போன்ற அரபு நாடுகளின் அதரவை இழக்க நேரிடும் என்பதால் அமெரிக்கா மிகுந்த நுட்பத்துடன் இஸ்ரேலை இந்த யுத்தத்தில் தலையிடாது தடுத்திருந்தது.

இந்த யுத்தத்தினால் ஈராக்கியர்களுக்கு அடுத்ததாக பாதிக்கப்பட்டவர்கள் பாலஸ்தீனியர்களே. சதாம் பாலஸ்தீனர்களின் பிரச்சினையை தூக்கிப்பிடித்ததும், காலங்காலமாக அவர்களிருக்கும் அமெரிக்க விரோதமுமே அவர்களை சதாமின் பக்கம் சரிய வைத்ததே தவிர அவர்கள் சதாமின் குவைத் மீதான ஆக்கிரமிப்பிற்கு ஆதரவானவர்களாக இருக்கவில்லை. இப்போது இவர்களின் நிலை சங்கடத்திலுள்ளது. இவர்களின் போராட்டத்திற்கு ஓரளவாயினும் உதவிசெய்த சவுதி அரேபியா, குவைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போன்ற நாடுகள் இனியும் உதவும் என்று எதிர்பார்க்க முடியாது. இந்த நாடுகளில் தொழில் புரிந்த இலட்சக் கணக்கான பாலஸ்தீனர்களின் நிலமை என்னவாகுமென்று தெரியவில்லை. அமெரிக்க அதரவு அமைப்பாக ஐ.நா.சபை நடந்துள்ளது என்ற குற்றச் சாட்டை நிவர்த்தி செய்வதற்காகவாயினும் எதிர் காலத்தில் அமெரிக்காவும், ஐ.நா.சபையும் பாலஸ்தீனர்கள் தொடர்பாக ஏதாவது நடவடிக்கையெடுக்க வேண்டிய நிர்ப்பந்தங்கள் ஏற்படலாம் என்ற ஒரு மெல்லிய ஊகத்தைத் தவிர வேறு நம்பிக்கைதரக்கூடிய விதத்தில் எந்த மாற்றங்களும் நிகழும் என எதிர் பார்ப்பதற்கில்லை.

சதாமின் அரசியல் விரோதிகளான அசாத், முபாரக் போன்றவர்களுக்கு சதாமின் வீழ்ச்சி பெருமகிழ்ச்சியைக் கொடுக்குமென்பதில் சந்தேகமில்லை. இந்நாடுகளுக்கு எதிர்காலத்தில் பெருமளவில் நிதியுதவி செய்யப்போவதாக குவைத்தும், சவூதி அரேபியாவும் தெரிவித்துள்ளன. குவைத்தைப் புனரமைக்கும் திட்டத்தில் அமெரிக்காவினதும், அதன் கூட்டணிநாடுகளினதும் நிறுவனங்கள் கொழுத்த இலாபம் சம்பாதிக்க தயாராகிக்கொண்டிருக்கின்றன. இப்படி சதாம் என்ற முட்டாளின் முட்டாள்தனத்தினால் எல்லாரும் இலாபம் சம்பாதிக்கையில் ஈராக்கிய மக்களின் சோகம் தொடர்கிறது.

அமெரிக்காவினை எதிர்த்தவர் என்ற ஒரேயொரு காரணத்திற்காக ஏதாவது ஒரு காரணத்தைக் கிண்டியெடுத்து சதாமை நியாயப்படுத்துவது நியாயமல்ல. சதாம் தனது நாட்டு மக்களின் சுதந்திரத்தைப் பறித்து அவர்களை இரும்புக் கரங்களால் அடக்கியாளும் ஒரு சர்வாதிகாரி; ஈரானுடனான யுத்தத்தில் இரசாயன ஆயுதங்கள் மூலம் ஈரானிய வீரர்களை நீசத்தனமான கொன்ற கொடுமையான மனிதன்; தனது சொந்த நாட்டு குர்திஸ் மக்களையே இதே விதத்தில் அழித்த கொடுங்கோலன்; கைப்பற்றிய குவைத்தின் அப்பாவி மக்கள்மீது சதாம் நடாத்திய வெறியாட்டங்களை- மேற்குலகத்தின் பிரச்சாரப் புழுகுகளைக் கழித்துப்பார்த்தாலும் - எந்த விதத்திலும் நியாயப் படுத்த முடியாது. இந்த மனிதரின் கையிலிருந்து ஈராக் மக்கள் தங்களை விடுவித்துக் கொள்ளும் நன்நாள் மிக விரைவில் வரவேண்டும் என்று ஆவலுடன் எதிர்பார்ப்பதே நியாயமானதாகும்.■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





பெப்ரவரி 91 இதழ் 1:3

# பெண்நிலைவாதம்- ஒரு பரிச்சயமற்ற எண்ணக்கரு

இன்று வரை பெண்நிலைவாதம், அதன் அடிப்படை, அதன் வேறுபட்ட அம்சங்கள், அதன் நியாயப்பாடு என்பன ஓரளவு தமிழுக்கும் தமிழருக்கும் அந்நியப் பட்ட விடயங்களாகவே இருந்து வந்துள்ளன. மேலும் அது மேல்நாட்டுப் பண்பாட்டிற்குரியது என்ற ஒரு தவறான முற்கற்பிதமும் பலரை அதிலிருந்து விலக்கி வைத்திருந்தது. மார்க்ஸீயம் போன்ற கருத்துகள் மேற்கிலிருந்து தமிழுக்கு மொழி பெயர்க்கப்பட்டு, நடைமுறைப் படுத்தப் பட்டு, விவாதிக்கப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பட்டளவுக்கு பெண்நிலைவாதம் செய்யப் படவில்லை.

பெண்நிலைவாதம் தோன்ற வேண்டிய அளவுக்குத் தமிழ்நாட்டில் பெண்கள் பிரச்சனை முற்றியிருந்த போதும், அவை அவ்வப் போது வெடித்துச் சிதறிய போதும் அவை தனியாக அடையாளம் காணப்படாது சாதி,மத முலாம் பூசப்பட்டோ அல்லது தனிமனிதக் குழுக்களின் பிரச்சனை எனக் கருதப்பட்டோ மறக்கப் பட்டன. மேலும் பெண்கள் பரவலாக அறிவுஜீவிகளாக இல்லாமற் போனதாலோ என்னவோ இத்தகைய உள்நாட்டுச் சமூகக் கண்ணோட்டத்தினூடாக எவ்வித காத்திரமான பெண்நிலைவாதக் கோட்பாடும் எழவில்லை. எனினும் ஆங்காங்கே உதிரிகளாகப் பாரதியார் போன்றோரின் பெண்நிலைவாதக் கருத்துகள் தோன்றின.

ஈழத்திலும் 60களில் சாதியப் போராட்டம் ஓரளவில் பரவலான ஒரு இயக்கமாக வளர்ந்திருந்தது. சிறுபான்மைத் தமிழினம் இரண்டாந்தரப் பிரசைகளாக நடத்தப் படும் விடயம் 1930 களிலிருந்தே கவனத்திலெடுக்கப் பட்டு அது குறித்த விவாதங்கள், நடவடிக்கைகள் மூலம் பொதுசன விழிப்பு தூண்டப் பட்டிருந்தது. எனினும் இரண்டாந்தரப் பிரசைகளாகப் பெண்கள் நடத்தப் படுவதை (தேர்ச்சியற்ற தொழில்களில் குறைந்த கூலி வழங்கப் படுவது முதல் சமூகத்தின் பெண் தொடர்பான இரட்டைவிதிகள் வரை) ஒருவரும் கவனத்திலெடுக்க வில்லை என்பது ஆச்சரியத்துக்குரியதே. சாதி மொழிப் பிரச்சனைகள் முக்கியத்துவம் பெற அவற்றை அரசியல்வாதிகள் தமது அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படுத்தியமையே காரணமென்றால், பெண்கள் பிரச்சனையானது குறைந்த பட்சம் அரசியல்வாதிகளால் பொருட்படுத்த ப்படுமளவு முக்கியமுள்ளதாகக் கூட எமது சமூகத்தில் கணக்கெடுக்கப் படவில்லை.

தாழ்த்தப் பட்ட மக்களிடையேயும், பாட்டாளி வர்க்கத்திடையேயும், பெண்களிடையேயும் அறிவுஜீவிகள் குறைவாகவே காணப்பட்ட காலத்திலும் கூட வர்க்க, சாதி முரண்பாடுகள் பற்றி கருத்துகள், விவாதங்கள் தமிழில் வெளிவந்தளவுக்கு, பால் முரண்பாடு பற்றிய கருத்துகள், விவாதங்கள் வெளிவரவில்லை.


இவை அரசியல்வாதிகள், புத்திஜீவிகளை உள்ளடக்கிய எம்சமூகம் பெண் தொடர்பாகக் கொண்டுள்ள போலித்தனமான, இரட்டை நியாயங்களைக் காட்டுகின்றனவா என்ற ஐயம் எழக் காரணமாகின்றன. சிலவேளை பெண்புத்திஜீவிகள் பெருகுமளவு எமது சமுதாயம் மாறுங்கால் இக்குறை நீங்கக்கூடும்.■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# பெண்கள்

நோர்வேஜிய மூலம்: Margaret Johansen

தமிழில்: பாமினி

வரவேற்பறையில் பாடசாலை வகுப்பறையில் அமர்ந்திருப்பது போல் ஒருவர் பின் ஒருவராக பெண்கள் அமர்ந்திருந்தார்கள். தட்டச்சு இயந்திரத்தில் செருகப்பட்ட தாளில் "நாங்கள் உங்களுக்கு தெரிவிக்க... " என்ற தொடர். ப்ளிங்! முடிந்த தாள் உருவப்பட்டு புதிய தாள் செருகப்பட்டது.

அவர்களுக்கு இப்படி அமர்ந்திருப்பது மிகவும் விருப்பமானது. தம்மை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒருவரும் பார்க்கவில்லை எனும் போது வம்பளக்கலாம். இரகசியமாக தொலைபேசியில் பேசலாம், ஒப்பனையைச் சரிசெய்து கொள்ளலாம், புகைக்கலாம்.
அவர்கள் வேலை செய்யும் நிறுவனத்தின் முகாமையாளரின் அபிப்பிராயப்படி பெண்கள் வேலை செய்கிறார்களா என ஒரு கண் வைத்துக் கொள்ளவேண்டும்.

அந்தக் கணத்தில் அவர் 20 வயதுகளில் உள்ள புதிதாக வேலைக்கு நியமிக்கப்பட்ட ஒரு இளைஞனுடன் தன் அறையில் அமர்ந்திருந்தார். அவனோ முதலாவது வேலை கிடைத்த சந்தோஷத்தில் மிதந்து கொண்டிருந்தான்.
"ஆம்,ஆம்" முகாமையாளர் பதிலளித்தார். கைகளை வயிற்றின் மேல்கோர்த்தபடி சாய்ந்து சுழல் நாற்காலியை அப்புறமும் இப்புறமும் சுழற்றிக் கொண்டிருந்தார்.

"தங்களுக்கு நன்னடத்தைக் காலம் மூன்று மாதங்கள். கணக்காய்வாளர் போல்சனுக் கருகில் தங்களுக்கு ஒரு மேசை ஒதுக்கப்படும். அங்கே வேலை செய்வதற்கான அமைதி கிடைக்கும். 11.30-12 மணி வரையிலான மதிய போசன இடைவேளையின் போது தேனீர் அல்லது கோப்பி தயாரித்துப் பரிமாறுவதைப் பெண்கள் கவனித்துக் கொள்வார்கள். அத்துடன் வெளியே ஏதாவது தேவைப்படின் அவர்களிடம் கூறினால் போதும். அநேகமாக யாராவது ஒருவர் கடைக்குப் போவார். தங்களுக்கு பெண்களைப் பற்றித் தெரியும்... பெண்களில் சிலர் திருமணமானவர்கள். காலை உணவு இடைவேளையின் போது கடைகளுக்குச் சென்று வீட்டிற்குத் தேவையானவற்றை வாங்குவார்கள். நான் கூறியது போல் தங்களுக்குத் தேவையானவற்றையும் அவர்கள் நிச்சயமாக வாங்கித் தருவார்கள்".

புதிதாக நியமிக்கப்பட்டவன் நன்றியுடனும் புரிந்ததற் கடையாளமாயும் தலையை ஆட்டிக் கொண்டிருந்தான்.
நிறுவன முகாமையாளர் எழுந்து அவனுடன் கைகுலுக்கி வாழ்த்தி அனுப்பினார்.

அநேகமான பெண்கள் கிட்டத்தட்ட 30 வயதுடையவர்கள். 'அல்மாலுண்'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்பவரைத் தவிர. பெண்ணின் வயது ஒருவருக்கும் சரியாகத் தெரிவதில்லை. சம்பள அலுவலகத்தில் தவிர வேறெவரும் அதைக் கேட்பதும் இல்லை.

அங்கு ஒருவகையில் பெண்களே பெண்களை வேலைக்கு அமர்த்தினார்கள் எனலாம். அது எவ்வாறெனில் விண்ணப்பதாரர் வரவேற்பறையை கடந்தே முகாமையாளரின் அறைக்குச் செல்ல வேண்டும். அவள் நேர்த்தியாக, கவர்ச்சியாக தோற்றமளிக்காவிடில் வரவேற்பறைப் பெண்கள் வேலைக்கு ஆள் நியமித்தாகி விட்டது (உண்மையில் நியமிக்கப் படாவிடினும்) என்று கூறித் திருப்பி அனுப்பி விடுவர். இல்லாவிடினும் முகாமையாளரும் இதைத் தானே கூறப் போகிறார். அங்கு எல்லோருக்கும் அவரது ரசனை தெரிந்திருந்தது. சிலருக்கு மிகவும் நன்றாகவே தெரிந்திருந்தது.

"வடிவா" என்பதே உள்ளகத் தொலைபேசியில் முகாமையாளரின் சுருக்கமான கேள்வி.
"இல்லையா, சரி திருப்பி அனுப்பிவிடுங்கள். எனக்கு கண்ணுக்கு குளிர்ச்சியானவையே தேவை" .

அந்நிறுவன இயக்குனருக்கு ஒரு 'வடிவான' மனைவி இருந்தாள். அந்நிறுவனத்தின் வியாபாரம் 3 மில்லியனைத் தாண்டியபோது அவர் வீடு, கார், மனைவி, மற்றும் அவரது பழைய கஷ்டமான வாழ்வை நினைவூட்டிய எல்லாவற்றையும் மாற்றிக் கொண்டார். அவர் தன்னைப் பிரதிநிதித்துவப் படுத்தக் கூடியதாக எதையாவது வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை எல்லோரும் புரிந்து கொண்டனர். வியாபாரம் என்றால் வியாபாரம்தான்.

மறுபுறமாக ஒரு அலுவலகப் பெண் அலுவலகப் பெண்தான் சாதாரண 'பெண்' அல்ல.
உதாரணமாக 15 வருடமாக அங்கு பணிபுரியும் அல்மா லுண் நன்கு படித்தவள். ஒரு பேராசிரியரின் மகளான அவள் பண்பாடு நிறைந்த சூழலில் வளர்ந்தவள். ஆம் அந்த வகையில் முகாமையாளர் உட்பட அந் நிறுவனத்தில் பணிபுரியும் எல்லோரையும் விட அவளே அந்நிறுவனத்திற்கு பொருத்தமானவள் என்றும் சிலர் பேசிக் கொண்டனர். இருந்தும் அவள் வெறும் 'லுண்' தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அல்மா லுண் இது குறித்து தனது எதிர்ப்பை இதுவரை வெளிக்காட்டியதில்லை. அவள் வேலைதேடிய காலத்தில் வேலைபெறுவது அவ்வளவு இலகுவாயிருக்கவில்லை. அதைவிட அவள் தந்தைக்கு ஏன் சகோதரர்களுக்குக் கூடப் பணிந்து நடந்த ஒரு தாயினால் வளர்க்கப்பட்டிருந்தாள்.

ஒருநாள் வரவேற்பறைக் கதவினூடாக நிமிர்ந்த,மலர்ச்சியான ஒரு இளம் பெண் உள்ளே வந்தாள். அவள் சிவந்த சுருளற்ற தலைமுடியையும், ஆரோக்கியமான பற்களையும் கொண்டிருந்தாள். உறுதியான கால்களில் நடப்பதற்கு வசதியான காலணி அணிந்திருந்தாள் (நாகரீக சப்பாத்து அல்ல). 'நேர்த்தி'யற்ற தோற்றம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இருந்தும்.....

பெண்கள் அவளைப் பார்வையால் அளந்தார்கள். அவளும் அவர்களை எடை போட்டாள். நட்பில்லாமல் அல்ல.
ஏதோ நடந்திருக்க வேண்டும். முகாமையாளரின் வலது கையான செல்வி கோல்ம் உள்ளகத் தொலைபேசியில் புதிய பெண்ணின் வருகையைத் தெரிவித்த போது அவளது பதில் நிச்சயமற்று இருந்தது மற்றவர்களுக்குக் கேட்டது. கேள்வி அவர்களுக்குத் தெரிந்ததுதான்.
சிவந்த தலைமுடி முகாமையாளரின் அறையுள் மறைந்தாள். அவள் வெளியில் வந்த போது நியமனம் பெற்றிருந்தாள். பெண்கள் ஒருவரை ஒருவர் பார்ததுக் கொண்டனர். கதவு மீண்டும் திறந்து மூடப்பட்டதும் "என்னால் நம்ப முடியவில்லை" என்றாள் செல்வி கொல்ம்.

மறுநாள் புதிதாக நியமிக்கப்பட்டவள் வேலைக்குச் சமூகமளித் திருந்தாள். துடிப்புள்ள பெண், எளிமையாக உடை அணிந்திருந்தாள். போட்டிக்கு வரமாட்டாள்.
"பிரித் பஷ்லே" என்று தனது பெயரைக் கூறி ஒவ்வொருவராக கைகுலுக்கினாள்.
"நான் வெளிநாட்டுத் தொடர்புகளுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளேன்."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவ் வேலைக்கு ஜேர்மன், பிரெஞ்சு, ஆங்கில மொழிகள் நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். இதற்கு முன் இவ்வேலையை ஒரு ஆணே செய்து வந்தார். அப்போது அவர் வெட்டி வெட்டிக் குப்பையாக எழுதுவதை இப் பெண்களே மீளத் தட்டச்சில் 'சுத்தமாக எழுத' வேண்டியிருந்தது. இப்போது ஒரு பெண்ணுக்காக 'சுத்தமாக எழுத' நேருமோ?

செல்வி கொல்ம் வேலை விபரங்களை பிரித்துக்குக் கூறத் தொடங்கினாள்.
"இங்கு நாம் மதிய இடைவேளையின் போது தொலைபேசி மத்திய இணைப்பைக் கவனித்துக் கொள்ளவதையும், கோப்பி தயாரிப்பதையும் நாளுக்கொருவர் என்ற அட்டவணைப் படி செய்கிறோம்".
"நாம் என்றால்..?" பிரித் கேட்டாள்.
"பெண்கள் தான்" என்று கூறிய செல்வி கொல்ம் பிரித்தை ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

பிரித் அமர்ந்து ஒரு சிகரட்டினைப் பற்ற வைத்தாள்.
"அப்படியானால் ஆண்கள்..." கேட்டபோது அவளின் கண்கள் சிறுத்திருந்தன.
"ஆண்கள் செய்வதில்லை " பதிலளித்த செல்வி கொல்ம் சற்று சங்கடப்பட்டாள்.
தன்னைச் சுதாகரித்துக் கொண்டு அவள் தொடர்ந்த போது குரல் அவள் நினைத்ததைவிடக் கூர்மையாயிருந்தது. பிரச்சனைகளை அவள் விரும்பவில்லை. அவை நிம்மதியைக் கெடுத்துவிடும்.

"ஆண்கள் செய்வதில்லை. நாங்கள்தான் அவர்களுக்கும் கோப்பி பரிமாறுவோம். அவர்கள் விரும்பினால் தேனீர். நாங்கள் இடைவேளையின் போது கடைக்குப் போனால் பணிஸ் போன்றவற்றை வாங்கி வரவேண்டும். அல்லது வேறு பொருட்கள்..."
"உதாரணமாக..." _பிரித்.
"உனக்குத் தெரியுந்தானே ஆண்களை. அவர்கள் தமது மனைவியருக்கு ஏதாவது வாங்குவதாயின்_ உள்ளாடை, நப்கின், அழகுசாதனப் பொருட்கள், இந்தமாதிரி ஏதாவது..."
செல்வி கொல்ம் ஒரு நமட்டுச் சிரிப்புடன் கூறினாள்.
"அவர்களே அவற்றை வாங்கட்டும் நான் இங்கு நியமிக்கப்பட்டது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெளிநாட்டுத் தொடர்புகளைக் கவனிக்க மட்டுமே. கோப்பி தயாரிக்கவோ, பரிமாறவோ, தொலைபேசி மத்திய இணைப்பைக் கவனிக்கவோ, கடைக்குச் செல்லவோ அல்ல. புரிகிறதா?" என்றாள் பிரித்.

பெண்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். மற்றவர்களிடம் கூற ஒரு விடயம் கிடைத்து விட்டது.
"ஓ ஆனால் நாங்கள் கட்டாயம்... " செல்வி கொல்மின் குரலில் விரக்தி.
"எனக்கு முன் இந்தப் பதவி வகித்தவர் இதைச் செய்தாரா?" ஒரு கணம் நிதானித்து விட்டு பிரித் கேட்டாள்.
" இல்லை ஆனால் அவர்..."
அவர்கள் ஒருவரை பார்த்துக் கொண்டனர்.

பிரித் வீட்டிலிருந்து கொண்டு வந்திருந்த கோப்பியைக் குடித்துவிட்டு கழுவுமிடத்தில் கோப்பையைக் கழுவினாள். கோப்பைகளையும், சாம்பற் கிண்ணங்களையும் கொண்ட பாரமான தட்டினை சுமந்து வரும் சக பெண்கள் கண்ணில் பட்டனர்.
"நீ ஒரு அற்பமானவள்" என்றாள் பிரித் கொல்மிடம். அதை அவள் மற்றவர்களிடமும் கூறினாள். அவர்கள் பதில் சொல்லவில்லை. ஆனால் அல்மா லுண் விநோதமாக உணர்ந்தாள். ஆனால் அது ஒன்றும் புதியதல்ல.

ஒரு நாள் அலுவலகத்தைச் சுத்தம் செய்பவர் சுகவீனமுற்றார். சில நாட்களின் பின் ஏதாவது செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. சாம்பற் கிண்ணங்கள் நிறைந்திருந்தன, தூசு கனமான படையாகப் படிந்திருந்தது. முகாமையாளர் எரிச்சலுற்றார்.
"பெண்களில் ஒருவர் " என்றார் முகாமையாளர்.
"அல்லது ஆண்களில் ஒருவர்" என்றாள் பிரித்.

முகாமையாளர் தனது வழமையான முகத்தை இழந்தார்.
அது ஒரு ஆச்சரியமான காட்சி, பெண்கள் நிலத்தைப் பாரத்துக் கொண்டிருந்தனர். அது உண்மையிலேயே சங்கடந் தருவதாக இருந்தது.
"ஆனால் இது பெண்களின் வேலை" _ முகாமையாளர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"மன்னிக்க வேண்டும் எனக்கு சரியாக கேட்டதோ தெரியவில்லை. ஆண்கள் மீது எனக்கு மிகுந்த மரியாதை உண்டு. அவர்கள் பல வீரசாகசச் செயல்கள் புரிந்திருக்கிறார்கள். ஆனால் ஒரு ஆணால் சில நிலவிரிப்புக்களை தூசகற்றி சாம்பற் கிண்ணங்களைத் துப்பரவு செய்ய முடியாதா என்ன? இது என்னை மிகவும் ஏமாற்றத்திற்குள்ளாக்கியுள்ளது திரு முகாமையாளரே" என்றாள் பிரித்.

பெண்களின் கன்னங்களில் சிவப்பேறியது. முகாமையாளருக்கோ இரத்த அழுத்தம் அதிகரித்து வார்த்தைகள் வராமல் தடுமாறினார்.

இந்நிலையை செல்வி கொல்மினால் நீண்ட நேரம் தாங்க முடியவில்லை.
"நான் இதைச் செய்கிறேன்" நட்புத் தொனிக்க கூறினாள் கொல்ம்.
முகாமையாளர் முகமெல்லாம் விகசிக்க மேசையில் முன்னோக்கிச் சரிந்தார்.
"எனக்கு தெரியும் தங்களை நம்பலாம் என்று."
செல்வி கொல்மின் முகத்தில் பெருமிதப் புன்னகை தோன்றியது.
மற்றவர்கள் அவளைப் பார்த்த பார்வையின் அர்த்தத்தைக் கண்டு பிடிப்பது கடினமாக இருந்தது.

"நீ ஒரு அற்பமானவள் " என்று திடீரென அல்மா லுண் கூறினாள். கன்னங்கள் சிவந்து உள்ளங்கை வியர்க்கத் தொடங்கியும் அவள் தளராது கூறினாள்.
"பிரித் கூறியது சரி. ஏன் வருடக்கணக்காக நாங்கள் இங்கு இந்த.. இந்தமாதிரி வேலைகளை.."

பின்னால் வந்து கொண்டிருக்கும் அவளது முகத்தில் கதவு அடிக்கப் போவதையும் பொருட்படுத்தாது, விழுந்தடித்துச் சென்று, உரோம மேலங்கி அணிந்து அலங்காரத்துடன் செல்லும் பெண்பாலினருக்கு, இயக்குனர் லிப்ற் கதவினைத் திறந்துவிட்ட சம்பவங்கள் அவள் நினைவில் வந்தன.
வருடக்கணக்காக அவள் மனதைப் புண்படுத்தக் கூடியவகையில் அவளுக்குத் தரப்பட்ட வேலைகள் ஞாபகத்திற்கு வந்தன. அவள் நினைத்தாள்.. இல்லை இன்னும் என்ன நினைத்தாள் என்று அவளுக்கு தெரியவில்லை.. எனினும் அவள் தடுமாறும் கால்களுடன் அடிமேல் அடிவைத்து முகாமையாளரின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேசையின் முன் வந்து நின்றாள். பாவாடையின் மடிப்புகளை நீவி, மூச்சை ஆழமாக இழுத்துவிட்டுக் கூறினாள்,
"நான் கூற விரும்புவது இது மட்டும்தான். இன்றிலிருந்து நான் ஒன்றும் பரிமாறப் போவதில்லை, ஒன்றையும் கழுவப் போவதில்லை, எவ்வித ஏவல் வேலையும் செய்யப்போவதில்லை."

முகாமையாளர் அவளை வாயைப் பிளந்தபடி பார்த்தார். கால்கள் நடுங்க அவள் திரும்பிச் சென்றாள். உண்மையிலேயே அல்மா லுண் தான் இதைக் கூறியிருக்கிறாள். அதுதான் மிகவும் ஆச்சரியமானது.

## மார்க்கிரட் ஜோகான்சன்



நொர்வீஜியப் பெண் எழுத்தாளர்களில் ஒருவரான மார்கரெட் ஜோகான்சன் "கோராவின் யுத்தம் (Coras krig)" என்ற தனது பத்தாவது நூல் வெளியீட்டுடன் எழுத்தாளராக இருபது வருடத்தைப் பூர்த்தி செய்கிறார்.

1973 அளவில் வெளிவந்த "பெண்கள் (Damene)" எனும் மேற்படி சிறுகதை "-men mannen ler" எனும் தொகுதியிலிருந்து எடுக்கப் பட்டு "பெண்களின் கண்ணாடி (Kvinnespeil)" எனும் பெண்கள் ஆக்கங்களின் தொகுதி ஒன்றில் பிரசுரமானது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# இலங்கையில் எழுச்சிகொள்ளும் இன்னொரு புதிய சக்தி

ஜசிந்தா ஜோசப்

அன்னையர் முன்னணி என அழைக்கப்படும் புதிய மனித உரிமைகள் குழு இம் மாதம் கொழும்பில் தனது முதலாவது தேசிய மாநாட்டையும், ஊர்வலத்தையும் நடத்தியுள்ளது. கடந்த சில வருடங்களில் காணமல்போன 40 000 பேர்கள் பற்றிய தகவல்களை தெரிவிக்க வேண்டுமென இவர்கள் கோரியுள்ளனர். நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து நூற்றுக்கணக்கானோரும், எதிர்கட்சி அரசியல்வாதிகளும், ராஜதந்திரிகளின் குழுக்களின் பிரதிநிதிகளும், ஏனைய மனித உரிமைக்குழுக்களும் இதில் கலந்து கொண்டனர். உலகின் ஏனைய பகுதிகளிலுள்ள நிறுவனங்களிலிருந்தும், பிரித்தானியாவில் வசிக்கும் கிட்டத்தட்ட 300 பெண்களிடமிருந்தும் வந்த ஆதரவுக் கடிதங்களில் சில வாசிக்கப்பட்டன.

மாநாட்டில் பின்வரும் தீரமானங்கள் நிறைவேற்றப்பட்டன:
காணாமல் போனவர்களில் எவராவது உயிரோடு இருப்பின் அவர்கள் பற்றிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விபரங்கள் வெளியிடப்படவேண்டும், கொல்லப்பட்டவர்களின் உறவினருக்கு மரணச்சான்றிதழும் நட்டஈடும் வழங்கப்பட வேண்டும்.

ஏறக்குறைய 10,000பேர் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். இதைவிட அதிகமானோர் எதிர்பார்க்கப் பட்டபோதிலும் ஊர்வலத்தில் வன் செயல்கள் இடம் பெறலாம் என்ற அரசின் பிரச்சாரம் பலரை தடுத்து விட்டது. எதிர்கட்சியினரின் பிரசன்னத்தைச் சுட்டிக் காட்டிய அரசு அன்னையர் எதிர்கட்சியினரின் அரசியல் லாபங்களுக்கு பயன்படுத்தப்படுவதாக குற்றம் சாட்டியுள்ளது. ஊர்வலம் மிகவும் அமைதியாக நடைபெற்றது. பெருந்தொகையான பெண்கள் வெள்ளைச் சேலை அணிந்து காணமல் போன கணவன், மகன்மாரின் படங்களை வைத்திருந்தனர். அவர்கள் இல்லாமல் தாம் படும் கஷ்டங்களை விபரித்த சில தாய்மார் அவர்களை பொலிஸார் பிடித்துக் கொண்டு போனதாயும் மறுநாள் தாங்கள் பிடிக்கவேயில்லை என்று கூறியதாகவும் கூறினர்.

கடந்த சில வருடங்களில் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட தென் இலங்கை இப்போது ஓரளவு வழமைக்குத் திரும்பியுள்ளது. இவ் வன் செயல்களுக்கு ஜே.வி.பியின் எழுச்சியும் அதை அடக்க முயன்ற இராணுவத்தினரின் நடவடிக்கைளும் காரணமாய் அமைந்தன.

அன்னையர் முன்னனியின் தாபகர்களில் ஒருவரும், சீருடையினரால் கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் ரிச்சார்ட் டி சொய்சாவின் தாயாருமான Dr.மனோன்மணி சரவணமுத்து, அன்னையர் முன்னனியானது இராணுவத்தினரால் பாதிக்கப் பட்டவர்களை மட்டுமன்றி ஜே.வி.பி யினரால் பாதிக்கப் பட்டவர்களையும் உள்ளடக்கும் என்று குறிப்பிட்டார். மேலும் அவர் கூறியதாவது: "இப் பெண்கள் தீவிரவாதிகள் அல்ல, எமது பிள்ளைகளின் இருப்பிடத்தை தெரிவியுங்கள் என்பதே அவர்களின் கோரிக்கை".

இதுவரை இம் முன்னனி தென்னிலங்கையை மையமாகக் கொண்டு இயங்குகின்ற போதும், ஆயிரக்கணக்கானோர் காணாமல் போகும் வடகிழக்கிற்கும் தம் நடவடிக்கைகளை விஸ்தரிப்பதில் ஆர்வம் கொண்டுள்ளனர்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இன்றைய யதார்த்தத்தில் பெண்களின் பங்களிப்பு

கலாநிதி தேவநேசன் நேசையா



நாம் இன்று வன்முறை அழிவையும், சமூகக் கட்டமைப்பினூடு இழையோடும் கண்ணீரையும், நாம் கட்டிக் காத்து வந்த விழுமியங்கள் கைவிடப்படுவதையும், ஒரு காலத்தில் நாம் பெருமைப்பட்டுக் கொண்டிருந்த நிறுவனங்கள் தகர்ந்து போவதையும் கண்கூடாகக் காண்கிறோம். பல்லாயிரம் இளைஞர்- யுவதிகளைப் பலிகொண்டதும் தனியார்-பொதுச் சொத்துக்களுக்கு அளவற்ற சேதத்தை ஏற்படுத்தியதுமான எமது உள் நாட்டு யுத்தத்தினால் எமது மக்கள் கொடூரப்படுத்தப் பட்டுள்ளனர், பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. 50களின் பிற்பகுதியிலும் அதன் பின் அவ்வப்போதும் யாழ்ப்பாணத்தை ஊடுருவிய இராணுவம் இன்று தீவு முழுவதிலும் அதிகரித்த அளவில் பரந்துள்ளது. அதன் பல்வேறு பிரிவுகளுடன் நாம் இன்று மோதுகிறோம். யாழ். உட்பட எம்நாட்டின் சில பகுதிகளில் காவல் துறை இயங்காததுடன், நீதி மன்றங்களும் செயலிழந்துள்ளன. சிவில் நிர்வாகம் சீர்குலைந்துள்ளது. அநேக பொது, தனியார், அரச சார்பற்ற நிறுவனங்கள் இல்லாது போனதுடன் சமூக வாழ்வு ஸ்தம்பித்து விட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாழ் சமூகமானது பழமை பேணியதுடன் எதிர்புரட்சிகரமானது என்றும் வர்ணிக்கப்பட்டது. இங்கு காலம் தாழ்ந்து சில முன்னேற்றங்கள் ஏற்பட்ட போதும் சாதி தொடர்பான முற்கற்பிதங்கள் இன்னும் உள்ளன. இவ்வகையில் யாழ் தமிழ்ச் சமுதாயமே முழு இலங்கையிலும் பிற்போக்கானது என்று கூடக் கூறலாம்.

யாழ் பெண்களும் கூடக் கட்டுப்பாடுகளை அனுபவித்த போதும், இவ்விடயத்தில் ஆதாரங்கள் தெளிவாகத் தெரிவதில்லை. கிரேக்க கடவுளரைப் போலவே இந்துக் கடவுளரிடையேயும் கல்வி அமைச்சு ஒரு பெண்ணிடமேயே இருந்தது. அவரே தெய்வங்களிடையே மிக அறிவுடையவராக இருந்திருக்கலாம். சரஸ்வதியினதும் கிரேக்க அறிவுத் தேவதையான 'அதேன்'_ இனதும் அந்தஸ்தை தவிர, பெண்கள் கல்வியில் முன்னேற்றமடைய பல தடைகள் இருந்து வந்துள்ளன. இவற்றுள் சில தடைகள் குறைக்கப்பட்டுள்ளன. உண்மையில் பிரித்தானிய ஆட்சியில் தோன்றிய கல்விக்கான சந்தர்ப்பங்களை பயன்படுத்தியவர்களுள் யாழ் மக்கள் முதன்மையானவர்கள். தென்னாசியாவில் மிகவும் சிறந்த, ஆரம்பகால நவீன பெண்பாடசாலைகளுள் யாழ்-இலுள்ளவையும் அடங்கும். அன்றிலிருந்து பெண்பாடசாலைகள் பல்கிப் பெருகின. இவற்றிலிருந்து பல பெண்கள் உயர் கல்விக்காக பல நாடுகளுக்கும் சென்றுள்ளனர்.

எனினும் பெற்றோராலும் பாடசாலைகளாலும் பாடம், தொழில் (career) போன்றவற்றைத் தெரிவு செய்தலில் மாணவருக்கு வழங்கப் படும் ஊக்குவிப்பு நெறிப்படுத்தல் போன்றவற்றில் இன்னும் மாணவருக்கும், மாணவியருக்குமிடையே வேறுபாடு காணப்படுகிறது. உயர்ந்த அந்தஸ்த்தை தரும் தொழில்களை வழங்கக் கூடிய பாடங்களைத் தொடருமாறு மாணவன் ஊக்குவிக்கப்படும் அதேவேளை மாணவியோ அறிவுரீதியாக குறைந்தளவு தேவைகொண்டதும், தொழில் வாய்ப்புக்களை இலகுவில் தராததுமான பாடங்களை எடுக்குமாறு தூண்டப்படுகிறாள். இவ்வாறான பாகுபாடுகள் இருந்தபோதும் இலங்கைப் பல்கலைக்கழக நுழைவில் அதிக போட்டி கொண்ட துறைகளில் (குறிப்பாக மருத்துவம்) பெண்கள் ஆண்களை வு தெரிவு செய்யப்படுவது பெருமைப்படத் தக்கதே. இவ்வகையில் பல வளர்ந்த நாடுகளைவிட நாம் முன் நிற்கிறோம். தடைகள் இருந்தபோதும் சமவசதிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தரப்பட்டால் மாணவரைப் போல, ஏன் அதைவிடவும் நன்றாக தம்மால் செய்யமுடியும் என மாணவியர் காட்டியுள்ளனர்.

எனினும் வேலைவாய்ப்பைப் பொறுத்தவரை சமுகம் பல வரையறைகளைத் தொடர்ந்தும் பெண்கள் மேல் திணித்து வருகிறது. இவ்விடயத்தைப் பொறுத்தவரை வரையறைகளைக் குறைப்பதில் பல வளர்ந்த நாடுகளைவிட நாம் பின்தங்கியே நிற்கிறோம். ஏன் ஒரு குறிப்பிட்ட விசேடதொழிலினுள் ஒருபெண் நுழைந்த பின்பும் அத்தொழிலிலுள்ள சில குறிப்பிட்ட துறைகள், பணிகளே அவளுக்கென ஒதுக்கப்படுகின்றன. ஏனையவை விலக்கப்படுகின்றன. பெண் சமயப்பணி செய்ய ஊக்குவிக்கப் படும்போதும், குருத்துவத்தின் பணிகளும் (உ+ம் பாதிரியார், குருக்கள்) மறுக்கப்படுகின்றன. மருத்துவத் தொழிலிலும் பொதுவான சத்திரசிகிச்சையை விட, மகப்பேறு_பெண்மருத்துவம் போன்றவற்றிலேயே அவள் ஊக்குவிக்கப்படுகிறாள். இவ்வாறே பெண்பொறியியலாளர் அதிகளவில் மேசைவேலைகளில் ஈடுபடும் போக்குள்ளது. இதனால் தொழில் தொடர்பான முன்னேற்றங்களில் தமது ஆண் தோழர்களைவிட குறைந்த வாய்ப்பையே பெறுகின்றனர்.

இவ்வாறே சட்டத்தொழிலிலும் பெண்கள் ஆண் சட்டத்தரணிகளால் தலைமை தாங்கப்படும் குழுவில் மிகக்குறைந்த எண்ணிக்கையில் பணியாற்றுகின்றனர் அல்லது ஆண் வழக்கறிஞரின் கீழ் உதவியாளராகப் பணியாற்றுகின்றனர். பெண்சட்டத்தரணிகளால் தலைமை தாங்கப்படும் குழுக்களோ, பெண்வழக்கறிஞரால் நடாத்தப்படும் வழக்குகளோ மிகக்குறைவு. ஒருகாலத்தில் இலங்கை நிருவாக சேவையில் பெண்கள் விலக்கப்பட்டிருந்தனர். அத்தடை நீக்கப்பட்ட போதிலும் இதுவரை எனக்குத் தெரிய ஒரேஒரு பெண்ணே இலங்கையில் அரசாங்க அதிபர் பதவியை வகித்து இருக்கிறார். அமைச்சின் செயலாளராக இதுவரை எந்தப் பெண்ணும் பதவி உயர்வு பெறவில்லை.

இவ்வாறாக விசேட தொழிலில் பெண் முன்னேறுவதற்கான தடை எல்லா நாடுகளிலும் காணப்படுகிறது. உலகில் பெண் பொதுவாக படிப்பித்தல், நோயாளர் பராமரிப்பு, நூலகம்_காரியதரிசிப் பணி, சமுகசேவை,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குறிப்பிட்ட தொழிற்சாலை வேலைகள், தையல் போன்றவற்றிலேயே செறிந்துள்ளனர். இவை பெண்களுக்குப் பொருந்தாத துறையென ஒருவரும் கூறமாட்டார். நான் இங்கு கூறவருவது என்னவெனில் பெண்கள் தமது எல்லைகளை விரிவுபடுத்துவதுடன், இன்று ஆண்கள் ஈடுபட்டுள்ள நூற்றுக்கணக்கான தொழில்களில் ஈடுபட்டு அவற்றில் தேர்ச்சியும் பெறவேண்டும்.

இன்று நிலவும் சூழல் இத்தகைய புதிய முயற்சிகளுக்கு இடம்தராது என எதிர்குரல் எழுப்பக்கூடும். அமைதியான சூழல் ஏற்படும்வரை பெண்கள் இதுவரை இருந்தது போன்ற பாதுகாப்பான தொழில்களிலேயே ஒட்டிக்கொள்ளவேண்டும் என்றும் இவர்கள் கூறக்கூடும். இன்றுள்ள அசாதாரண நிலைமைகளே புதியவாய்ப்புக்களைக் கைக்கொள்வதற்குச் சரியான நேரமாகும் என்று சில பெண்ணிலைவாதிகள் வாதிடலாம். உண்மையில் இவ்வாதத்தை ஆதரிக்கப் பல நாடுகளில் இருந்து சான்றுகளைக் காட்டலாம். உ+தாரணமாக அல்ஜீரியப் புரட்சிப் பெண்களில் ஏற்பட்ட மாற்றத்தைப் பற்றி Franz Fanon கூறுகிறார். "புரட்சிக்கு முன் துணையின்றி வீட்டை விட்டு வெளிக்கிட்டறியாத பெண் இப்போது நம்பகமாக, புதிய பணிகளைப் பொறுப்பேற்றுச் செய்கிறாள். அவள் இரவுகளை முன்பின் அறியாத குடும்பத்தவருடன் கழிக்க நேரிடுகிறது. அவளது கணவனோ ஏனையோரோ எதிர்பாலாரிடையான உறவுகளை ஒரு புதிய வெளிச்சத்தில் பார்க்க கற்றுக் கொண்டுள்ளனர்".

இத்தகு முன்னேற்றங்கள் எமது சமுகத்திலும் கடந்த சில வருடங்களில் ஏற்பட்டிருக்கிறது.இங்கு என்னைப் பிழையாக விளங்கிக் கொள்ளக் கூடாது. பெண் தேவையற்ற ஆபத்தான பணிகளில் கட்டாயம் ஈடுபடவேண்டும் என்றோ, ஆண் பெண் இருவருக்குமே பொருத்தமற்றதென நான் கருதும் வன்முறை நடவடிக்கைகளில் அவள் இறங்க வேண்டும் என நான் கூறவில்லை. நான் சொல்வதெல்லாம் புரட்சிகர நிலைமைகளில், உ+மாக இரு நூற்றாண்டுகளுக்கு முந்திய பிரஞ்சுப் புரட்சியில் அல்லது அரை நூற்றாண்டுக்கு முந்திய எகிப்திய/ இந்திய சுதந்திரப் போராட்டத்தில் அல்லது தற்போதைய பலஸ்தீனப் போராட்டத்தில் பெண்களது நடவடிக்கைகள் தொடர்பாக இருந்த தடைகளில் சில அகற்றப்பட்டதுடன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குறித்த சில சுதந்திரங்களை பெறும் சந்தர்ப்பங்களையும், புதிய தொழில்களில் ஈடுபட/முன்னேற வாய்ப்பும் கிடைத்தன. இவை ஒரு அமைதியான சூழலில் ஏற்பட குறைந்த சாத்தியமே உள்ளது. இவ்வாறே வேகமான பொருளாதார கலாச்சார மாற்ற காலங்களில் உ+மாக தென்இந்தியாவில் சங்க காலத்திலும், ஐ.அமெரிக்காவில் பல பத்தாண்டு காலத்திலும், பல நாடுகளில் இரண்டாம் உலகப் போரை அடுத்த காலங்களிலும் பெண் முன்பு விலக்கப்பட்ட பல முக்கிய பதவிகளை வகிக்கவும், பாரம்பரியமாக மறுக்கப்பட்ட சுதந்திரங்களைப் பெறவும் முடிந்தது. இன் நன்மைகளில் சில நீடிக்கவும் கூடும், சில இவ் அசாதாரண நிலைமைகள் வழமைக்குத் திரும்பியதும் மறையலாம். சிலவழிகளில், சங்ககாலத்திலோ அல்லது பிரஞ்சுப் புரட்சியின் போதோ தாம் அனுபவித்த முழுச் சுதந்திரங்களையும் அதன் பின்பு பெண்கள் முழுதாக மீளப் பெறவில்லை என்றே கூறலாம்.

தற்போதுள்ள அசாதாரண சூழல் பெண்களின் முன்னேற்றத்திற்கான புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது. 80களில் பெண்குழுக்கள் வரையறைக்கு உட்பட்ட வகையில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பொது விடயங்களில் முக்கிய பங்களிப்புச் செய்திருக்கின்றனர். மேலும் ஆண்களில் பெரும் பகுதி கொலை செய்யப் பட்டும், போராட்டங்களில் ஈடுபட்டும், வெளிநாடு சென்றும் உள்ள நிலையில் முக்கிய பதவிகளுக்கு பெண்களின் பங்களிப்பு முன்னரிலும் அவசியமாகிறது. இதில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எனினும் இந்நிலையில் மேலும் முன்னேற்றம் ஏற்படுத்தப் படுவதோடு இந் நன்மைகள் தொடர்ந்து நிலை நிறுத்தப் படவேண்டும். வரலாற்றின் முக்கிய காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். எமது எதிர்காலம் பற்றியும் நாளைய சமுதாயம் பற்றியும் ஒரு தெளிவற்ற நிலை காணப்படுகிறது. இவ் எதிர்காலத்தை நிர்ணயிப்பதிலும், இச் சமுதாயத்தின் நிறுவனங்களை உருவாக்குவதிலும், அதன் விழுமியங்களை தாபிப்பதிலும், வியாபாரம் மற்றும் பொது சேவைகளை நடத்துவதிலும் இனிவரும் ஆண்டுகளில் பெண்கள் முக்கிய பங்கு வகிப்பார்கள் என நாம் நம்புவோம்.

(இலங்கையிலிருந்து வெளிவரும் Lanka Guardian சஞ்சிகையில் இடம்பெற்ற Cast Oppression and Womens' Subordination in Jaffna என்ற கட்டுரையின் சில பகுதிகள் இங்கு நன்றியுடன் பிரசுரிக்கப்பட்டுள்ளது.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விஜயன்


# அம்மாவிற்கு ஓர் கடிதம்

அம்மா!
நான் பாதுகாப்பாக உள்ளேன்!
உன் குரல் கேட்காத,
உன் பார்வைக் கெட்டாத- ஓர்
நீள் தொலைவில் -அம்மா!
நான் பாதுகாப்பாக உள்ளேன்.

குளிரைக் கண்டஞ்சி
சூரியன் உதிக்க மறுத்திட்ட
வெண் பனி பூக்கும்
புதியதோர் உலகில்
அம்மா நான் பாதுகாப்பாக உள்ளேன்.

வான் தொடும் பனி மலையை
வந்து தழுவும் சூரியக் கதிரின்
தோல்வி சகியாது
தனது உறவிற்கஞ்சி -சூரியன்
எட்டிப் பார்த்து விட்டு விலகும்
ஓர் இருண்ட உலகில்
அம்மா நான் பாதுகாப்பாக உள்ளேன்.

சித்திரையை அணைத்து வந்து
பனியை வென்றிட்ட களிப்பில்
ஆடிவரை போக மறந்து
சூரியன் ஓடித்திரியும்
உலகின் வட துருவில்
அம்மா நான் பாதுகாப்பாக உள்ளேன்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




உச்சி முகர்ந்து -நீ
முத்தமிடும் போது
உன் உள்ள நினைவுகளை
நானறிவேன்
பள்ளி வயதிலுள்ள இன்பக் கனவுகளை
இடையிலே நிறுத்தி
அடிமை விலங்கொடிக்க அணிதிரண்டோமன்று
அம்மா நீ அழுதாய்.

ஆயுதத்தை அணைத்த வண்ணம்- நான்
போகுமிடம் உனக்கு சேதி வரும்.
தோழர் சாகுமிடம்- உனக்கு
பீதி தரும்
அம்மா நீ அழுவாய்.

பதவிப் போட்டி, பயனற்ற செயல்கள்
உடலே உயிரைக் குதறும் -சில
உருப்படாத இளைஞர் செயல் கண்டு
விட்டு விலகி- நான்
எட்டப் பறந்த போது- அம்மா!
நீ சிரித்தாய்.

இன்று!
வேற்று நாட்டில் வாழ்வை இழந்து
நான் ஓர் அகதி
சொந்த நாட்டில் சுகங்களிழந்து
நீயும் ஓர் அகதி



இந்தக் குளிர் காற்றில் எனக்கு
தினம் சேதி வரும்- அது
உன் சோக நினைவுகளை தழுவி வரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அம்மா! அழாதே
வாழ்வின் கனவுகளை வரலாறு தின்னுகையில்
நீயும் நானும் அகதிகளே.■

ரதி

## வெளியே வா

பொறுமையைப்
பொறுப்பெடுத்தது
போதும்
நாற்குணங்களுக்கு
நல்லாதரவு
வழங்கியது போதும்
அடிமை விலங்குகளை
அணிகலனாய்
பூட்டியது போதும்

சமையல் தொடங்கி
படுக்கை வரை
இலவச சேவை
வழங்கியது போதும்

சுமைகளும்
துளிதுளியான
துன்பத்தின்
வெளிப்பாடுகளும்
மட்டும்
உனதல்ல
சூழவுள்ள சகலவற்றிலும்
உனக்கும் சம பங்குண்டு
வெளியே வா.■





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விதிமுறையற்ற ஒரு யுத்தம்

**சிந்து**

சென்ற வருடம் ஆனி 11 ல் ஈழத்தில் ஆரம்பித்த யுத்தம் இன்னும் ஒரு முடிவுக்கும் வரவில்லை. நடைமுறையில் யுத்தங்கள் யுத்தத்திற்குரிய விதிமுறைகளுடன் நடை பெறுவது மிக அரிது. அதிலும் ஈழத்தைப் பொறுத்த வரை எவ்வித நியாய தர்மங்களுக்கு இடமேயில்லை. சர்வதேசத்தின் கவனம் எல்லாம் வளைகுடா யுத்தத்தில் ஈர்க்கப்பட்டிருக்கும் இவ் வேளையில் இலங்கை அரசு இன ஒழிப்பில் எவ்வித தயக்கமும் இன்றி ஈடுபட்டு வருகிறது.

சர்வதேச சமுகத்தின் கவனம் எம்மீது இருந்தாற் போல ஏதேனும் வித்தியாசமாகவா நடந்து விடப்போகிறது? 'சர்வதேச சமுகத்தின்' இரட்டை நியாயங்கள் எமக்குத் தெரியாதா? அவனவனுக்குத் தன்தன் பிராந்திய நலனிலும், ஆயுத விற்பனையிலும், எண்ணைய் விலையிலும் தான் கவனமேயன்றி மக்களில் அல்ல" என்று குறைபடுபவரின் பேச்சிலும் நியாயம் இல்லாமலில்லை.

சீனாவிடம் அண்மையில் கொள்வனவு செய்த விமான, கடற்படை உபகரணங்கள், தமிழ்நாட்டு அரசு இந்திய மத்திய அரசால் பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தால் புலிகளுக்கு பின்தள ஆதரவு குறைந்தமை, வளைகுடா யுத்தம் உலக கவனத்தை ஈர்த்தமை ஆகியன தந்த தென்பும், தென் இலங்கையில் இலங்கை அரசின் மனித உரிமைகள் மீறல் தொடர்பாக அதிகரித்து வரும் மக்கள் எதிர்ப்பைத் திசை திரும்ப வேண்டிய நிர்ப்பந்தமும் இலங்கை அரசு வட கிழக்கு யுத்தத்தைத் தொடர்வதற்கான முக்கிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காரணங்கள். சித்திரை மாதத்திற்கு இடையில் புலிகளை நிர்மூலமாக்குவேன் என்ற ரஞ்சன் விஜயரத்தினவின் (உதவி பாது.அமை.) முழக்கம் கருதுவது யாதெனில் தமிழ் மக்களை அழித்தொழிப்பதே என்பதை யுத்த நடைமுறைகள் தெளிவாக்குகின்றன.

## மக்களின் அவலம்; பட்டினிச் சாவு

சென்ற ஆனி மாதத்திலிருந்து வடபகுதியில் தொடர்ச்சியாகக் குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்றிருக்கின்றன. மக்கள் வாழும் பகுதிகளைத் தாக்கி மக்களை அகதிகளாக கோவில், பாடசாலைகளில் ஒன்று சேரச் செய்த பின் இந்த மக்கள் நிரம்பிய மையங்களுக்கு குண்டு போடுவதையும் இலங்கை ராணுவம் செய்கிறது. மற்றும் கைத் தயாரிப்பான நெருப்புப் பிடிக்கும் வாயுக்கள்_றப்பர் கலந்த பீப்பாக் குண்டுகள் (இவை நேபாம் குண்டுகளைப் போல் எரிந்தபடி தோலில் ஒட்டிக் கொள்ளும்) பொருட்காவி விமானங்களிலிருந்து உருட்டி விடப்படுகின்றன.இதனால் இவை இலக்கின்றி விழுகின்றன. அவற்றை எண்ணும்போது எமக்கே பயமாக இருக்கிறது என்று சில இராணுவத்தினர் பெயர் குறிப்பிடாமல் கூறியிருக்கின்றனர். இருந்தும் விஜயரத்தின நாம் புலிகளின் பதுங்கு குழிகளையே தாக்குகிறோம் என்று சப்பைக் கட்டு கட்டுகிறார்.

வட பகுதியில் உணவு, மருந்து, எரிபொருள், மின்சாரம் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் வருகை தடை செய்யப்பட்டுள்ளது. இந்தியாவிலிருந்து சிறு வள்ளங்கள் மூலம் பொருட்கள் கொண்டுவரப்படுவது கூட தமிழ் நாட்டு ஆட்சிக் கலைப்பின் பின் தடுக்கப்பட்டுள்ளது. மக்கள் யுத்த நிலைமை காரணமாக உழைப்பின்றி உள்ளனர். இந்நிலையில் மக்கள் பசியில் இறக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

## மனித உரிமைகள் மீறல்; ஜனநாயக பரிகசிப்பு

இலங்கை அரசின் உரிமைகள் மீறல் குறித்து பல்வேறு அறிக்கைகள் மனித உரிமை நிறுவனங்களால் வெளியிடப்பட்டுள்ளன. வடகிழக்கு மாகாணத்தில் கடந்த சில மாதங்களில் காணாமல் போன இளைஞர்களின் உறவினர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கிறிஸ்தவ மத தாபனங்கள், மக்கள் சபைகளிடம் கொடுத்த புகார்கள் தொகுக்கப்பட்டு பட்டியல் இடப்பட்டுள்ளன. அதன்படி 2009 இளைஞர்கள் அகதிமுகாம், திரையரங்கு, வைத்தியசாலை ஆகியவற்றிலிருந்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருபகுதி கொலை செய்யப்பட்டுள்ளதாக அங்கு நிவாரணப்பணி புரிவோர் வீதி ஓரங்களில் வீசப்பட்ட பிணங்களை ஆதாரமாக கொண்டு தெரிவிக்கின்றனர்.

இதை விடவும் ஜே.வி.பி யினரை நசுக்கும் சாட்டில் யு.என்.பி அரசு பல எதிர்கட்சி உறுப்பினர்களை கொலை செய்ததுடன் எதிர் கட்சியினரின் நடவடிக்கைகளையும் முடக்கியுள்ளது. மேலும் பாராளுமன்றத்தில் சென்ற கிழமை இடம் பெற்ற கைகலப்பில் எதிர் கட்சியினர் (குறிப்பாக நவசமசமாஜக் கட்சி எம்.பி.யான வாசுதேவ நாணயக்கார) ஆளும் கட்சியினரால் தாக்கப்பட்டது குறித்து அவர்கள் மிகவும் அதிருப்தியுற்றுள்ளனர். இரண்டு வருடங்களுக்குப் பின் முதல் முறையாக எதிர் கட்சியினர் விலைவாசி உயர்வுக்கு எதிராக ஊர்வலம் ஒன்றை நடத்தியுள்ளனர். பிரதம எதிர்கட்சித் தலைவியான சிறிமாவோ பண்டார நாயக்க, மக்கள் அரசாங்கத்திற்கு எதிராக சமாதான- ஜனநாயக வழியில் போராட்டுவதோடு அடுத்த தேர்தலுக்கு தயாராக வேண்டும் என்று கூறியுள்ளார்.

## ரஞ்சன் விஜயரத்தினாவின் மரணம்

இறுதியாகக் கிடைத்த தகவல்களின்படி உதவிப் பாதுகாப்பு அமைச்சரான ரஞ்சன் விஜயரத்தின பங்குனி 2ல் கொழும்பில் நடந்த குண்டுவெடிப்பில் கொல்லப் பட்டார். இவரின் மரணத்தில் சம்பந்தப்பட்டவர்கள் எவரென்ற அடிப்படையினைக் கொண்டுதான் ஏற்படவிருக்கும் அரசியல் மாற்றங்களை எதிர்பார்க்கலாம். ஜே.வி.பியினரோ, அல்லது ஆளுங்கட்சியின் பதவி இழுபறிகளோ இக்கொலைக்குக் காரணமாயிருப்பின் எங்கள் பிரச்சினை தொடர்பாக பெரும் மாற்றங்களை எதிர்பார்க்க முடியாது. தமிழ்க் குழுக்களோ அல்லது இராணுவத் தலைமையில் ஏற்பட்ட பிளவுகளோ காரணமாயின் குறிப்பிடத்தக்க சில மாற்றங்களை ஈழத்து அரசியல் காணும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சக்தி

**கலை, இலக்கிய, சமூக விஞ்ஞானக் காலாண்டிதழ்**

கலை இலக்கிய சமூக விஞ்ஞானம் சார்ந்த ஆக்கங்களை சக்தி உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறாள். ஆக்கங்கள் சிறுகதைகளாகவோ தொடர்கதைகளாகவோ கவிதைகளாகவோ கட்டுரைகளாகவோ சிறு துணுக்குகளாகவோ அமையலாம். பிரசுரமாகும் ஆக்கங்களுக்கு அவற்றின் படைப்பாளிகளே பொறுப்பாளிகளாவார். பிரசுரமாகாத ஆக்கங்களைத் திரும்பப் பெறவிரும்புவோர் சுய விலாசமிடப்பட்ட அஞ்சலுறை ஒன்றினை (நோர்வேயாயின் உரிய முத்திரையுடன்) தயவுடன் இணையுங்கள்.

SAKTHI
P.Boks99 Oppsal, 0619 oslo 6. NORWAY.

தபாற் கணக்கு இலக்கம்(Postgiro no.)
0824 0383676

ஆண்டுச் சந்தா விபரம்

இலங்கை: இலவசம், ஸ்கன்டிநேவியா: NKr 60,
ஐரோப்பா: US$ 15, ஏனையநாடுகள்: US$ 20.

Tamil Typeset: Peenads Graphics(Oslo), Printed at GCS Hurtigtrykk(Oslo)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நூல் அறிமுகம்

## மனிதம்

சுவிற்ஸர்லாந்தில் இருந்து வெளிவரும் இருமாத இதழ்

postfach-12,
3000 BERN-11,
SWITZERLAND

## சுவடுகள்

நோர்வேயிலிருந்து வெளியாகும் கலை, இலக்கிய, அரசியல் மாத இதழ்

Herslebs Gate 43, 0578,
Oslo 5,
NORWAY

## மரபு

அவுஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் பல்சுவை இதழ்

p.o.Box 232, Wantirna South,
Victoria 3152,
AUSTRALIA

## ஓசை

பிரான்ஸிலிருந்து வெளிவரும் கலை இலக்கிய அரசியல் இதழ்

R.Rajagobal, 5 Ruehermel,
75018 Paris,
FRANCE



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்